Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JANUARY 24, 2022

திங்கட்கிழமை ஜனவரி 24, 2022 | ஒளி: 07 கதிர்: 213 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# முன்னணி மாறுபாடாக மாறுகிறது ஒமிக்ரான்



நாட்டின் முன்னணி வைரஸ் மாறுபாடுகளில் ஒன்றாக ஒமிக்ரான் மாறி வருவதாகவும் நோய்த்தொற்றுக்கான காரணத்தைக் கண்டறியும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## நாளை முதல் மீண்டும் மின்வெட்டு



போதிய எரிபொருள் விநியோகம் இல்லாதமையால் நாளை (25) முதல் இரவு நேரங்களில் மின்சாரம் தடைப்படும் என்று, இலங்கை மின்சார சபையின் பதில் பொது அத்தியட்சகர் கலாநிதி சுசந்த பெரேரா தெரிவித்தார்.

மின்சாரம் துண்டிக்கப்படும் முறை மற்றும் நேரம் இன்று அறிவிக்கப்படும் எனவும் இன்று மின்சாரம் துண்டிக்கப்பட வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாளை செவ்வாய்கிழமை (25) மின்சாரம் விநியோகத்தில் தடை ஏற்படுமாயின் பொதுமக்களுக்கு முன்னரே அறிவிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியம்

தற்போது நிலவும் வரட்சியான வானிலை காரணமாக குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியம் நிலவுகின்றது.

இதன் காரணமாக நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவி பொது முகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி நீரை பயன்படுத்துமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



ஆணை இல்லாமல் ஆட்சியில் இருந்தால்

## அரசாங்கத்துக்கு எதிராக வீதியில் இறங்குவோம்



ஆணை இல்லாமல் ஆட்சியில் இருக்க அரசாங்கம் முயற்சித்தால் வீதியில் இறங்குவோம் என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, அரசாங்கம் தன்னிச்சையாக மக்களிடம் இருந்து அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிப்பதாக தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதற்கான நடவடிக்கை தொடர்பிலான அறிக்கைகள் தொடர்பிலேயே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பு ஏற்பாடுகளின் ஊடாக பொதுமக்களால் ஆணை வழங்கப்படுவதாகவும், அதற்கு மக்கள் பிரதிநிதிகள் கட்டுப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## ‘நுவரெலியாவில் இருந்து நுவரெலியாவுக்கு’ கையெழுத்து இயக்கம்

### 27ஆம் திகதி மாலை மாவட்ட செயலாளரிடம் மனு கையளிக்கப்படும்

பி.கேதீஸ்



மலையக அரசியல் அரங்கம் முன்னெடுத்த ஒரு மாத கால கையெழுத்து இயக்கத்தின் நிறைவாக, நுவரெலிய மாவட்டம் முழுவதும் பயணித்து மக்களிடம் சேகரிக்கும் பணியை ‘நுவரெலியாவில் இருந்து நுவரெலியாவுக்கு’ எனும் பயணமாக நடத்தவுள்ளதாக மலையக அரசியல் அரங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியும் பிரதமரும் சுயமாக செயற்படமுடியாது



ஜனாதிபதியும் பிரதமரும் பாராளுமன்றத்தில் தனித்தனித் தீர்மானம் எடுத்து, சுயமாக செயற்படமுடியாது என, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

‘உடன்பாட்டுக்கு சுதந்திர வாய்ப்பு’ என்ற தொனிபொருளில் மெதகத் மாவத்த சிவில் அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் தொழிற்சங்க பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு மேலும் உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர், பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டு, சலம் வடியும் காயமாக மாறியுள்ள நாட்டை, குணப்படுத்த சம்பிரதாய வேலைத்திட்டம் ஒருபோதும் ஒத்துவராது என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

மனித உரிமைகள் கண்காணிப்பக அறிக்கை

## நாட்டை எதிர்மறையாக சித்திரிக்கிறது

### கண்காணிப்பகத்தை சாடுகிறது இலங்கை

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ‘உலக அறிக்கை 2022’ ஆனது நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைமையின் மிகைப்படுத்தப்பட்ட மற்றும் தேவையற்ற எதிர்மறையான படத்தை சித்திரிப்பதாக இலங்கை சாடியுள்ளது.

தொடர்ச்சி P2

## அரச நிறுவனங்களில் ஏற்படவுள்ள மாற்றங்கள்

சில அரச கூட்டுத்தாபனங்கள், சபைகளின் தலைவர்கள், பணிப்பாளர் பதவிகளில் எதிர்வரும் வாரங்களில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில நிறுவனங்களின் தலைவர்கள் மட்டும் மாற்றப்பட்டு, சில நிறுவனங்களுக்கு பணிப்பாளர் சபை புதிதாக நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு விரிவான மாற்றத்தை கொண்டு வரும் நம்பிக்கையில் அரச கூட்டுத்தாபனங்கள், சபைகளின் பிரதானிகள் இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ச்சி P2



வெலிகம கடலில் நீராடச் சென்ற

## சிறுமிகள் இருவர் மாயம்

வெலிகம கடற்கரையில் நீராடச் சென்ற 12 வயது மற்றும் 16 வயதுடைய சிறுமிகள் இருவர் காணாமல் போயுள்ளதுடன், மேலும் இருவர் உயிர் பிழைத்துள்ளனர் என்று வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு உறவினர்கள் இந்த விபத்தில் சிக்கியதுடன், வெலிகம, முதுகமுவ, பத்தேகம பகுதியைச் சேர்ந்த இரண்டு சிறுமிகள் காணாமல் போயுள்ளனர்.

கடலில் நீராடச் சென்ற உறவினர்கள் நால்வரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும், அருகில் இருந்த இரு இளைஞர்கள் உட்பட சிலரால் சிறுமியொருவரும் யுவதியும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முதுகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சிறுமிகள், பூப்புனித நீராட்டு விழா விருந்தொன்றுக்கு சென்றிருந்த நிலையில், அவரது உறவினர்களுடன் கெப் ஒன்றில் கடலில் நீராடுவதற்கு வந்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## அனைத்து பிரஜைகளுக்கும் விரைவில் டிஜிட்டல் வலட்

டிஜிட்டல் தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டதன் பின்னர், அனைத்து பிரஜைகளுக்கும் டிஜிட்டல் வலட் (டிஜிட்டல் பை) அறிமுகப்படுத்தப்படும் என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடவுச்சீட்டு, பிறப்புச் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ்கள், பரீட்சைச் சான்றிதழ்கள் உள்ளிட்ட அத்தியாவசிய தனிப்பட்ட ஆவணங்களை தங்கள் திறன்பேசியிலுள்ள டிஜிட்டல் வலட்டில் வைத்து எந்த நேரத்திலும் சமர்ப்பிக்க அனைத்து குடிமக்களுக்கும் அனுமதியளிக்கப்படும் என்று கூறினார்.

தொடர்ச்சி P2



## கைதி மரணம்; அதிகாரிகள் மூவர் பணி இடைநிறுத்தம்

எம்பிலிப்பிட்டிய, கந்துருகஸ்ஸார திறந்தவெளிச் சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்துவந்த லலித் சமிந்த ஹெட்டிகே என்ற கைதியின் மரணம் தொடர்பில் சிறைச்சாலையின் மூன்று அதிகாரிகள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான (நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு) சந்தன ஏகநாயக்க, நேற்று (23) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மின்துறையில் தீவிர மா:.பியா உள்ளது

### இது திடீர் பிரச்சினையல்ல என்கிறார் மைத்திரி

### பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாமையால் மக்கள் இருளில்...



மின்துறையில் பல ஆண்டுகளாக தீவிர மாஃபியா இருப்பதாகத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மின்சாரப் பிரச்சினை திடீரென ஏற்பட்ட பிரச்சினையல்ல என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## எரிவாயு தானாக வெடிக்காது

### விசாரணை வேண்டும் என்கிறார் ஜோன்ஸ்டன்



எரி வாயு தானாக வெடிக்காது; எரிவாயு தன்னிச்சையாக வெடிக்கிறது என்பதை நான் ஏற்கவில்லை என்று தெரிவித்த நெடுஞ்சாலைகள் அமைச்சரும் ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவுமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இவற்றுக்குப் பின்னால் உள்ள நாசகாரர்கள் குறித்து உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## பாசிப்பயறு செய்கைக்கு ஒத்துழைப்பு

நெற்செய்கை மேற்கொள்ள முடியாத காணிகளில் பாசிப்பயறு செய்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

தரம் 5 புலமைப்பரிசில்

## குற்றச்சாட்டுகள் தொடர்பில் கடும் விசாரணை வேண்டும்



நேற்று முன்தினம் (22) நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பின்னர், சில மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் கடுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# முன்னணி மாறுபாடாக மாறுகிறது ஒமிக்ரான்

கொரோனா பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து எடுக்கப்பட்ட 78 பயோஃபில்ம் மாதிரிகளின் சமீபத்திய பரிசோதனையின் போது 75 பேருக்கு ஒமிக்ரான் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என, நேற்று முன்தினம் (22) அறிவிக்கப்பட்டது.

பரிசோதிக்கப்பட்ட எஞ்சிய மூன்று மாதிரிகள் கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாட்டின் தீவிர விகாரம் என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறையின் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

வெளியிடப்பட்ட தகவலுக்கமைய 75 புதிய ஒமிக்ரான் தொற்றுக்குள்ளானவர்கள் கொழும்பு, அவிசாவளை, பொரலஸ்கமுவ, ஹோமாகம, கட்டுகொட, கொஸ்கம, மடபாத, பாதுக்க, பரகடுவ, வெல்லம்பிட்டிய, காலி, கொலன்னாவ, நுகேகொட மற்றும் கல்கிசை ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என்று தெரியவந்துள்ளது.

## நாளை முதல் மீண்டும் மின்வெட்டு

களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்தில் ஐந்தரை நாட்களுக்கு மாத்திரமே டீசல் உள்ளது. சபுகஸ்கந்த மின் நிலைய எரிபொருள் கையிருப்பு, சனிக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

சபுகஸ்கந்த அனல் மின் நிலையம் தற்போது உற்பத்தியற்றதாக காணப்படுகிறது என்ற அவர், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை மின் வெட்டு அமுல்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

இன்றையதினம் (24) எரிபொருள் கிடைத்தால் இந்தப் பிரச்சினை தீரும் எனவும் நாளையும் (25) எரிபொருள் இல்லை என்றால், பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என்றார்.

இரவு நேரங்களில் தேவை அதிகமாக இருக்கும் போது, மின்வெட்டு தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் மக்களுக்குத் தெரிவிக்காமல் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என்றும் சுட்டிக்காட்டினார்.

தற்போது நீர்மின் நிலையங்கள் நீர்மட்டம் குறைந்து வருவதால் அதன் அதிகபட்ச அளவை எட்டியுள்ளன. மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு முன்னர் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆலோசனையை இலங்கை மின்சாரசபை பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## அரசாங்கத்துக்கு எதிராக வீதியில் இறங்குவோம்

ஒரு தொற்றுநோய் அல்லது வேறு ஏதேனும் பொருளாதார அல்லது உலகளாவிய பிரச்சினைகள் காரணமாக ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக் காலங்களை தன்னிச்சையாக நீட்டிக்க இலங்கை அரசியலமைப்பில் எந்த ஏற்பாடுகளும் இல்லை என்று சுட்டிக்காட்டினார்.

பொது வாக்கெடுப்பு மூலம் விதிமுறைகளை நீட்டிக்க முடியும் எனவும்
ஒரு பிரிவினர் பொதுமக்களுக்கு சேவை செய்ய ஆர்வமாக இருந்தால், அடுத்த மூன்று ஆண்டுகளில் தங்கள் திட்டங்களை நிறைவேற்றி புதிய ஆணையை பெற முடியும் என்றார்.

எனவே, தன்னிச்சையான நடவடிக்கைகளின் மூலம் அதிகாரத்தை கைப்பற்றும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தமது கடும் ஆட்சேபனையை தெரிவிப்பதாக அத்தநாயக்க எம்.பி மீண்டும் வலியுறுத்தினார்.

## அரச நிறுவனங்களில் ஏற்படவுள்ள மாற்றங்கள்

மில்கோ நிறுவனத்தின் தலைவராக இருந்த லசந்த விக்கிரமசிங்க அண்மையில் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முகாமைத்துவ செயலாளர் ரேணுகா பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, லிட்ரோ நிறுவனத்தின் தலைவராக இருந்த தெஷார ஜயசிங்க, அன்றைய தினம் ஜனாதிபதியால் பதவி நீக்கப்பட்டு மீண்டும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மக நெகும ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை இராஜினாமா செய்யுமாறு நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அண்மையில் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'நுவரெலியாவில் இருந்து நுவரெலியாவுக்கு' கையெழுத்து இயக்கம்

நுவரெலியா மாவட்ட செயலக அதிகரிப்பினை காலி மாவட்டத்துக்கு மாறுபட்ட விதத்தில் பாரபட்சமாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிராகவும் நுவரெலியா மாவட்டத்தில் முழுமையான பிரதேச செயலகங்களை நடைமுறைப்படுத்தவும் கோரியே இந்த கையெழுத்து இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.மலையக அரசியல் அரங்கத்தின் ஏற்பாட்டில், கொழும்பில் சனிக்கிழமை (22) நடாத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டது. ஜனவரி 25 ஆம் திகதி நுவரெலியா நகரில் ஆரம்பிக்கும் கையெழுத்து பெற்ற கோவைகளைச் சேகரிக்கும் பயணம் வலப்பனை, ஹங்குராங்கத்தை, கொத்மலை, அம்பகமுவை ஆகிய பிரதேச செயலக எல்லைகளின் ஊடாகப் பயணித்து இறுதியாக 27ஆம் திகதி நுவரெலியா பிரதேச செயலக எல்லையை அடையவுள்ளது.

அன்று மாலை மாவட்ட செயலாளரிடம் பொது மக்கள் மனு கையளிக்கப்படும் என அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள நகரங்களில் தமது குழுவினரிடம் கையெழுத்து மனுவை பொதுமக்கள் கையளிக்கத்தக்கதாக தமது களச் செயற்பாட்டாளர்கள் ஊடாக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

இத்தகைய ஜனநாயக வழியில் எமது கோரிக்கையை மாவட்ட செயலாளர் ஊடாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், பிரதமர் , ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அதேவேளை, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாதவிடத்து மலையக அரசியல் அரங்கம் சார்பாக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கினை தொடர்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியும் பிரதமரும் சுயமாக செயற்பட முடியாது

நாடு வீழ்ந்துள்ள பொருளாதார பாதாளத்தில் இருந்து மீட்சி பெற முடியுமா என்று கேட்டால் அதற்குரிய நேரடி பதில் 'முடியும்' என்று கூறிய எதிர்க்கட்சி தலைவர், நிலையானதும் நேர்மையானதுமான வேலைத்திட்டமே அதற்கு அவசியமாகும்.

ஜனாதிபதியும் பிரதமரும் பாராளுமன்றத்தில் தனித்தனித் தீர்மானம் எடுத்து சுயமாக செயற்படமுடியாது. விசேடமாக சட்டவாக்கத் துறை, நிறைவேற்று துறை, நீதித் துறை என்ற மூன்று தூண்கள் ஒன்றுபட்ட சுழற்சி முறைமை இருக்க வேண்டும்.

பொது வேலைத்திட்டம் யதார்த்தபூர்வமாக இருப்பதுடன் தினந்தோறும் கலந்துரையாடலுக்கு உட்பட கூடிய நேர்மையானதாக இருக்க வேண்டும். வருமான பற்றாக்குறை மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. வருமான பற்றாக்குறையை மறந்து, பொருளாதார வளர்ச்சி வேகம் தொடர்பில் பேசுவது நகைப்புக்குரியது என்றார்.

இலங்கையினால் நியமிக்கப்பட்ட தூதுவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் மிகவும் அதிகமாகும். துரதிஷ்ட வசமாக பெரும்பாலான தூதுவர்கள் இதனை புரிந்து கொள்ளாமல் இருப்பதுடன் அது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்றும் கூறினார்.

## நாட்டை எதிர்மறையாக சித்திரிக்கிறது

மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட சர்வதேச சமூகத்துடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டைக் கொண்ட கொள்கையை இலங்கை பின்பற்றுவதாகவும் வெளிவிவகார அமைச்சு, நேற்று முன்தினம் (22) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், சவாலான உலகளாவிய பொருளாதார மற்றும் சமூக சூழலில் பரபரப்பான மற்றும் பக்கச்சார்பான அறிக்கையிடல் உள்நாட்டு முரண்பாட்டைத் தூண்டும் மற்றும் மோசமாக்கும் அபாயம் உள்ளது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

பொறுப்பான, சமநிலையான மற்றும் பாரபட்சமற்ற அறிக்கையிடலின் முக்கியத்துவத்தை நாங்கள் முன்னிலைப்படுத்துகிறோம் என குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையின் மூலம் நிலையான சமாதானத்தை நிலைநாட்டுவதில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார் என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கைதி மரணம்; அதிகாரிகள் மூவர் பணி இடைநிறுத்தம்

குறித்த சிறைச்சாலைக்குப் பொறுப்பான சிறைச்சாலை அதிகாரி, காவலர் மற்றும் சார்ஜன்ட் ஆகியோர் ணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், விசாரணை முடியும் வரை இந்த மூன்று அதிகாரிகளின் பணி இடைநிறுத்தம் அமுலில் இருக்கும் எனவும் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

உயிரிழந்த கைதியின் மகளை தொலைபேசியில் அழைத்து மிரட்டி பணம் பறித்த குற்றச்சாட்டின் பேரில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், கைதியின் மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஏகநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலை அதிகாரிகளால் கைதி அடித்துக் கொல்லப்பட்டதாக உறவினர்கள் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவின் உதவி அத்தியட்சகரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த 49 வயதுடைய குறித்த கைதி கடந்த 13 ஆம் திகதி மர்மமான முறையில் உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மின்துறையில் தீவிர மா:பியா உள்ளது

காலி வித்யாலோக பிரிவேனா மகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக மின்துறை பணிகளின் தொழில்நுட்ப பிரிவுகளில் பல சிக்கல்கள் உள்ளன. அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத துரதிர்ஷ்டமான நிலையால் மக்கள் இருளில் தவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மின்சார நெருக்கடி இல்லாத காலத்திலும் தனியாரிடமிருந்து மின்சாரம் வாங்க பெரும் தொகை செலவழிக்கப்படுகிறது.

இருந்த பிரச்சினைகள் ஒன்று சேர்ந்து ஒன்று சேர்ந்து, மிக மோசமான இடத்திற்கு வந்துவிட்டன என்ற அவர், எண்ணெய் நெருக்கடி மற்றும் நிலக்கரி தொடர்பான பிரச்சினைகள் பொருளாதார நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள நிலைமை என்று குறிப்பிட்டார்.

## சிறுமிகள் இருவர் மாயம்

உயிர் பிழைத்த இரு சிறுமிகளும் வெலிகம, வலான அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

14 மற்றும் 21 வயதுடைய இருவரில் ஒருவரின் நிலை மிகவும் மோசமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடலில் காணாமல் போன இரு சிறுமிகளைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸாரும் கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

## எரிவாயு தானாக வெடிக்காது

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் ஏன் நீக்கப்படவில்லை என பாராளுமன்றத்தில் அண்மையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கேஸ் நிறுவன தலைவரை ஜனாதிபதி நீக்கவில்லை. ஜனாதிபதி என்ற முறையில் பதவி விலகுவதா வேண்டாமா என்பதை தீர்மானிக்கும் முழு அதிகாரமும் அவருக்கு உள்ளது என்றார்.

எரிவாயு வெடிப்பு பற்றி விசாரணை நடத்த ஆரம்பத்திலே கோரிக்கை விடுத்தேன். இந்த எரிவாயு தன்னிச்சையாக வெடிக்கிறது என்பதை நான் ஏற்கவில்லை. ஆனால் இது கவனிக்க வேண்டிய விடயம். இதைப் பற்றித் விசாரணை நடத்த கோரிக்கை விடுத்த போது, எங்களில் சிலர் சிரித்தார்கள்.

தேவாலயத்திற்குச் சென்று வெடிகுண்டுகளை வைக்கின்றார்கள். இப்போது யாரும் தலைமறைவானவரைக் கண்டுபிடிக்கச் சொல்லவில்லை. பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்க வேண்டும். யாரிடம் இந்த வெடிகுண்டுகள் இருந்தன, யார் இதற்கு பின்னணியில் இருக்கிறார்கள். இதில் யார் யார் ஈடுபட்டுள்ளனர் என்பதை எதிர்காலத்தில் அறியலாம் என்றார்.

> ஜனாதிபதி பற்றி பேச வேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதியாக அவர் சரியான முடிவுகளை எடுக்கிறார். அமைச்சர்கள், தலைவர்களை நியமிக்கவும் நீக்கவும் அவருக்கு முழு அதிகாரம் உள்ளது

ஜனாதிபதி பற்றி பேச வேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதியாக அவர் சரியான முடிவுகளை எடுக்கிறார். அமைச்சர்கள் மற்றும் தலைவர்களை நியமிக்கவும் நீக்கவும் அவருக்கு முழு அதிகாரம் உள்ளது.

இந்த எரிவாயு வெடிப்பைப் பற்றி விசாரணை நடத்த வேண்டும். நிச்சயமாக இந்தக் குழுவைப் பற்றி கண்டுபிடிக்க வேண்டும் என தெரிவித்தார்.

தேவாலயத்தில் குண்டு வைத்து போன்று நாட்டின் தேசிய பாதுகாப்பை குழப்ப முயல்வது குறித்து கண்டறியுமாறு நான் ஜனாதிபதியிடம் கோருகின்றேன் என்றார்.

## அனைத்து பிரஜைகளுக்கும் விரைவில் டிஜிட்டல் வலை

இத்திட்டம் 30 மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். திறன்பேசி மூலம் பணம் செலுத்துவதற்காக மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட லங்கா கியூஆர் குறியீட்டை, கம்பஹாவில் நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தற்போது, லங்கா கியூஆர் குறியீடு செலுத்தும் திட்டம் நாட்டின் 13 முக்கிய நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுற்றுலாத்துறைக்கும் லங்கா கியூஆர் குறியீட்டை அறிமுகப்படுத்த கவனம் செலுத்தப்பட்டு வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நிகழ்வில் உரையாற்றிபோது தெரிவித்தார். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் கலந்தாலோசித்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## பாசிப்பயறு செய்கைக்கு ஒத்துழைப்பு

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகளை கண்காணித்த போது கிடைத்த தகவல்களை கருத்திற்கொண்டு ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன வசதிகள் இன்மையால், சிறுபோகத்தில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத காணிகளில் இடைப்போகத்தின் மேலதிக பயிராக பாசிப்பயறைப் பயிரிடுமாறு ஜனாதிபதி கூறியுள்ளார். தேவையான விதைகளை பெற்றுக் கொள்வதற்கு விவசாயிகளுக்கு நிதி உதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

## குற்றச்சாட்டுகள் தொடர்பில் கடும் விசாரணை வேண்டும்

கொழும்பில் நேற்று (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஒன்றியத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பரீட்சைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவது பரீட்சைகள் திணைக்களத்தின் பொறுப்பாகும். பரீட்சைகளின் போட்டித்தன்மை தொடர்பில் கல்வி அமைச்சு தெளிவான முடிவை எடுக்க வேண்டும்.

ஆசிரியர்கள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதாகக் கூறிய அவர், ஆசிரியர்கள் தவறு செய்திருந்தால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதை தாங்கள் எதிர்க்கவில்லை என்று குறிப்பிட்டார்.

நீர்கொழும்பில் க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போது இதேபோன்ற பிரச்சினைகள் எழுப்பப்பட்டதாகவும், விசாரணைகள் இன்னும் நடந்து வருவதாகவும் கூறிய அவர், பரீட்சைகளில் நம்பிக்கை இல்லாமல் போகின்றமை தீவிரமான விடயம் என்று குறிப்பிட்டார்.




## வைரஸ் காய்ச்சல் பரவுகிறது

டெங்கு மற்றும் கொரோனா தொற்றைப் போன்ற வைரஸ் காய்ச்சல் நாட்டின் பல மாகாணங்களில் பரவி வருவதாக ஔடத ஒழுங்குபடுத்தல் மற்றும் விநியோக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

எனவே, காய்ச்சல் ஏற்படின் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டாம் என இராஜாங்க அமைச்சர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

காய்ச்சலுக்கான அறிகுறிகள் காணப்படின், உடனடியாக வைத்தியரை நாடுமாறும் அவர் கூறியுள்ளார்.

## தங்க நகைகளுடன் பெண் கைது

சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை சட்டவிரோதமாக நாட்டிற்கு கடத்த முற்பட்ட பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் (22) கைது செய்யப்பட்டுள்ளார்.

799 கிராம் நிறையுடைய குறித்த தங்க நகைகளின் பெறுமதி 91 இலட்சத்து ஆயிரத்து 646 ரூபாவாகும்.

கண்டியைச் சேர்ந்த 30 வயதான பெண்ணொருவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் டுபாயிலிருந்து நாட்டிற்கு வருகை தந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தங்க நகைகளுக்காக 27 இலட்சத்து 67 ஆயிரத்து 152 ரூபாய் வரி மற்றும் 10,000 ரூபாய் அபராதமும் செலுத்துமாறு சுங்கத் திணைக்களம் குறித்த பெண்ணுக்கு உத்தரவிட்டுள்ளது.

## குளத்தில் மூழ்கி மாணவன் மரணம்

ரஸீன் ரஸ்மின்

மாதம்பை தினிப்பிட்டிய குளத்தில் மூழ்கி பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாதம்பை பூவக்குளம் பகுதியில் வசிக்கும் 15 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை தனது சக நண்பர்கள் இருவருடன் குளத்தில் பூ பறிக்கச் சென்ற நிலையிலேயே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த மாணவனின் சடலம் சிலாபம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த சம்பவம் தொடர்பில் மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நீரில் மூழ்கி சிறுமி மரணம்

திருகோணமலை இறக்கக்கண்டி பாலத்துக்கு அருகில் நீரில் மூழ்கி சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் (22) மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை , பாசல்மாவத்த ஆண்டாங்குளம் பகுதியைச் சேர்ந்த 10 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

> **குறித்த சிறுமியுடன் நீரில் மூழ்கிய மற்றுமொரு சிறுமி திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதி அனுமதிக்கப்பட்டுள்ளார**

புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவி மற்றுமொரு மாணவி மற்றும் ஆசிரியருடன் இறக்கக்கண்டி பகுதிக்கு சென்ற போது பாலத்துக்கு அருகில் உள்ள கடலில் நீராடியுள்ளார். இதன்போதே சிறுமி அலையில் அள்ளுண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த சிறுமியின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை வைக்கப்பட்டுள்ளது. குறித்த சிறுமியுடன் நீரில் மூழ்கிய மற்றுமொரு சிறுமி திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் குச்சவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘பண்டோரா பேப்பர்ஸ்’ ரஞ்சனிடம் வாக்குமூலம்

‘பண்டோரா பேப்பர்ஸ்’ தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வுச் செய்வதற்கான ஆணைக்குழு தீர்மானித்துள்ளது

ரஞ்சன் ராமநாயக்கவின் கோரிக்கைக்கு அமையவே இந்த வாக்குமூலம் பெறப்படவுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டத்தரணியூடாக சத்தியக்கடதாசி மூலம் வாக்குமூலம் வழங்குமாறு




அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

‘பண்டோரா பேப்பர்ஸ்’ தொடர்பிலான விசாரணைகளுக்காக நிருபமா ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோரிடம் மாத்திரமே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளுக்காக உள்நாட்டு வணிக வங்கிகள், அரச வங்கிகள் மற்றும் வரி வருமான திணைக்களத்திடம் ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன.

சர்வதேச அரசியல் தலைவர்கள் மற்றும் கோடீஸ்வரர்களின் இரகசிய கொடுக்கல், வாங்கல் அடங்கிய பட்டியலில் இலங்கையின் முன்னாள் அமைச்சரான நிருபமா ராஜபக்ஷ

மற்றும் அவரது கணவரான வர்த்தகர் திருக்குமார் நடேசன் ஆகியோரது பெயர்களும் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் இன்று (24) முதல் ஆரம்பிக்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்றைய தினம் (24) வெளியிடப்படுமென ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது வரை அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் எண்ணிக்கை 79 ஆகும். அவற்றுள் சட்ட சிக்கல்களை கொண்ட சுமார் 6 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மாத்திரம் செயலற்ற அரசியல் கட்சிகளாக கருதப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு அரசியல் கட்சிகளாக பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 03 அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






## விசாரிக்க முடிவு

இந்தியாவிலிருந்து நெனோ நைதரசன் உரத்தை இறக்குமதி செய்வதில் இடம்பெற்றதாக கூறப்படும் முறைகேடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வுச் செய்வதற்கான ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.







## மஹா கும்பாபிஷேகம்

வரலாற்றுத் தொன்மைக் கொண்ட கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுர நாயகி உடனுறை உருத்திர புரீஸ்வரர் சிவாலயத்தின் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்று (23) நடைபெற்றது. கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 6 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி சனிக்கிழமை (22) அதிகாலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெற்றது. மஹா கும்பாபிஷேக பெருவிழா, நேற்று (23) வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் சமய பெரியார்கள் மற்றும் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

(படங்களும் தகவலும் யது பாஸ்கரன்)













## கிளிநொச்சியில் இன்று முதல் தடுப்பூசி

யது பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் 14 தொடக்கம் 19 வரையான வயதினருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இன்று(24) திங்கட்கிழமை முதல் மேற்கொள்ள இருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கொவிட் -19 பரவலை கட்டுப்படுத்தும் வகையில் தடுப்பூசியேற்றும் செயல்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன கிளிநொச்சி மாவட்டத்தில் 14 தொடக்கம் 19 வயதுடைய பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனையவர்களுக்கான முதலாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஏற்கெனவே முதற்கட்ட தடுப்புசிபெற்றுக் கொண்டவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்கும் செயற்பாடுகள் இன்று (24) திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்படவுள்ளது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்துள்ளார்

இதேநேரம் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை பெற்று வருகின்ற கிளினிக் நோயாளர்களின் பத்துக்கும் குறைவானவர்களே மூன்றாம் கட்ட தடுப்பூசிகளை பெற்றுக் கொள்கின்ற நிலை கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்றனர். இந்த மூன்றாம் கட்ட தடுப்பூசிகளை வழங்குவது தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை கிராமங்களில் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்-

## 75 பேருக்கு ஒமிக்ரோன்




ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்கூட பரிசோதனைகளில் மேலும் 75 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

12 கொரோனா மரணங்கள் சனிக்கிழமையன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனாவைப் போன்றே மற்றுமொரு வைரஸ் காய்ச்சலும் டெங்கு காய்ச்சலும் பல மாகாணங்களில் பரவும் அபாயம் உள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டார்.

இவை ஒரே மாதிரியான நோய் அறிகுறிகளைக் கொண்டுள்ளதால், உடனடியாக வைத்தியரை அணுகுமாறு அவர் கேட்டுக்கொண்டார். இதேவேளை, கொரோனா தொற்று ஏற்பட்ட 40 சிறுவர்கள் கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் ஜீ.வீரசூரிய தெரிவித்தார்.

**தேவை**

கட்டான இரண்டாம் சந்தியிலுள்ள வீடொன்றில் வாழும் தாயை பார்த்துக்கொள்வதற்காக வீட்டில் தங்கியிருந்து வேலைச் செய்வதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட, குடும்பச் சுமை இல்லாத சுகதேகியான பெண் தேவை. உணவுத், தங்குமிட வசதிகள் உள்ளது. ( தாயை பார்த்துக்கொள்வதற்கு மற்றுமொரு பெண் இருக்கிறார். அவருடன் இணைந்து தாயைப் பார்த்துக்கொள்வதற்குத் தேவை ) 077394811 அல்லது 0718188413

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர் :** சுப்ரீம் அக்கவுண்டிங் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்

**கம்பனியின் புதிய பெயர் :** த அபெக்ஸ் சொலூஷன் (பிரைவேட்) லிமிடெட்

**பதிவு அலுவலக முகவரி :** இல:74ஏ, 2ம் மாடி, அட்வான்டேஜ் கட்டிடம், தர்மபால மாவத்தை, கொழும்பு 07.

**கம்பனியின் இலக்கம் : PV 00216326**

**மாற்றம் நிகழ்ந்த திகதி : 30.12.2021**

**கம்பனியொன்றின் நிலபர மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) பிரிவின் பிரகாரம் கப்ருகா ஹோல்டிங்ஸ் லிமிடட் (PB 00247881) பதிவு செய்யப்பட்ட முகவரி இல: 237/22ஏ, விஜய குமாரதுங்க மாவத்தை, கொழும்பு 05 தனது பங்குகளை கொழும்பு பங்குச்சந்தையில் 07.01.2022 அன்று பட்டியலிடுவதற்கான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம். கம்பனிகள் சட்டத்தின் 11(3) பிரிவின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட திகதியில் கம்பனியின் பெயர் கப்ருகா ஹோல்டிங்ஸ் பீஎல்சீ என மாற்றப்பட்டதாக கருதப்படுகிறது.

இயக்குனர் சபையின் அறிவித்தலின் பிரகாரம்

க்ரஸ்டன் கோபரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்

**கம்பனி செயலாளர்கள்**

முல்லைத்தீவில் மும்முரமாக இடம்பெறும் பெரும்போக நெல் அறுவடை:

# விளைச்சல் வீழ்ச்சியால் விவசாயிகள் அவதி

■ விஜயரத்தினம் சரவணன்



முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

இந்நிலையில் இம்முறை பெரும்போக நெல் விளைச்சல் பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பயிர்ச்செய்கைகளுக்குரிய இரசாயன உரமின்மை, களை நாசினி, கிருமி நாசினி என்பவற்றின் விலையேற்றம் காரணமாக அவற்றைத் தாம் வாங்கி பயன்படுத்ந முடியாத நிலை போன்ற காரணங்களாலேயே இம்முறை தமது பெரும்போக நெற்செய்கையின் விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை தற்போது எரிபொருட்களின் விலை அதிகரிப்பால் அறுவடை இயந்திரக்கூலி முன்பை விடத் தற்போது அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, ஏக்கர் ஒன்றுக்கு தாம் 9,000 ரூபாய் தொடக்கம், 10,000 ரூபாய் வரையில் அறுவடை இயந்திரக்கூலியாக வழங்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனைவிட நெல்லைச் சந்தைப்படுத்துவதிலும் பல்வேறு இடர்பாடுகளுக்குத் தாம் முகங்கொடுப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, உலர்ந்த சிவத்தப் பச்சை (கோறா) நெல்லை வியாபாரிகள் 6,000 ரூபாய்க்கு தம்மிடமிருந்து பெறுவதாகவும், உலராத நெல்லை 4,500ரூபாய்க்கு பெறுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தாம் கட்டாயமாக நெல்லை உலரவைத்து சந்தைப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், தற்போது முல்லைத்தீவில் மும்முரமாக நெல் அறுவடை இடம்பெறுவதால், விவசாயிகள் அனைவரும் நெல் உலரவிடும் தளங்களை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

ஆகவே, முல்லைத்தீவு விவசாயிகள் பலத்த இன்னல்களுக்கு மத்தியில், பிரதான வீதிகளை நெல் உலரவிடும் தளங்களாக பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உயிலங்குளம் இதுவரை புனரமைக்கப்படாமையால்

# சிரமத்தை எதிர்கொள்ளும் விவசாயிகள்

முல்லைத்தீவு, துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள உயிலங்குளம், இதுவரை புனரமைக்கப்படாமையால் வாழ்வாதாரத் தொழிலான விவசாயத்தில் ஈடுபடும் 73க்கும் மேற்பட்ட விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

உயிலங்குளம் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்ற நிலையில், இதைப் புனரமைத்துத் தருமாறு மேற்படி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த குளத்தின் கீழ், 139.5 ஏக்கர் வகையான வயல் நிலங்களில் 73க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில், குறித்த குளத்தின் அணைக்கட்டின் ஒரு பகுதி சேதமடைந்து, தற்காலிக புனரமைப்பு வேலைகள் செய்யப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

இக்குளத்தை புனரமைத்துத் தருமாறு விவசாய அமைப்புகள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றன. இதுவரை புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறு காணப்படுவதனால் எதிர்காலத்தில் குளத்தில் போதியளவு நீரை சேகரித்தல், பயிர் செய்கைகளை முன்னெடுத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையில் காணப்படுவதாகவும் குறித்த குளத்தின் நீர் கொள்ளளவை அதிகரித்து, பெரும் போகத்திலும் சிறு போகத்திலும் பயிர்செய்கை மேற்கொள்ள கூடிய வகையில் புனரமைத்து தர வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ச்சியாக விவசாய அமைப்புகள், விவசாயிகள் முன்வைத்து வருகின்ற போதும் இதுவரை புனரமைக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொள்ளைகள்

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய நாள்களாகப் பகல் கொள்ளைச் சம்பவங்கள் பல பதிவாகிவருகின்றன.

முள்ளியவளை, மாமூலைப் பகுதியில், தளபதி என்பவரின் வீட்டில், நேற்று முன்தினம் (22) வீட்டில் யாரும் இல்லாத வேளை, ஓட்டை பிரித்து வீட்டுக்குள் இறங்கி, அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 190,000 ரூபாயை கொள்ளையர்கள் கொள்ளையடித்து சென்றுள்ளார்கள்.

மகளை, புலமைப் பரிசில் பரீட்சைக்காக பாடசாலைக்கு தாயார் அழைத்துச் சென்றவேளை, குடும்பத்தலைவன் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்த வேளை, வீட்டில் யாரும் இல்லாத நிலையில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதன்கிழமை (19) புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடையார் கட்டு நகர்பகுதியில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில், ஆசிரியர், மாணவர் அனைவரும் காலை இறைவணக்கத்துக்காக சென்றவேளை, மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையன் பாடசாலையின் முன்பகுதியில் உள்ள ஆசிரியரின் அறையில் வைக்கப்பட்டிருந்த ஆசிரியரின் கைப்பையை அபகரித்துச் சென்றுள்ளான்.

பெறுமதியான அலைபேசிகள், பணம் என்பன கைப்பையில் உள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, வெள்ளிக்கிழமை பாடசாலை முன்னால் ஆசிரியரின் வெறும் கைப்பையை வீசிவிட்டுச் சென்றுள்ளார்கள்.

இதுதொடர்பிலும் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்கள்.

அண்மைய நாள்களில், வீடுகளில் உள்ள பொருட்கள், மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகி வருகின்றன.



# சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வேன் விபத்து

## ஒருவர் காயம்

■ சண்முகம் தவசீலன்

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற வேன், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, கொக்காவில் பகுதியில் விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற குறித்த விபத்தில், வேன் ஆனது வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. விபத்து குறித்து மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சட்டவிரோதமான கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம்



பொய்களை வாரி வழங்கும் ஒரு குழுவினர், தமிழர் விடுதலைக் கூட்டணியை தந்திரமாக அபகரிக்கத் திட்டமிட்டு, இன்று நடவடிக்கைக் குழுவைக் கூட்ட இருப்பதாகவும், சனிக்கிழமை(29) நடைபெற இருக்கும் கூட்டத்தில் நியமனங்களை வழங்க இருப்பதாகவும், இதில் கலந்து கொள்வது சட்டவிரோதமான செயலெனவும் ஆகவே இதில் கலந்து கொள்ள வேண்டாம் எனவும் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய (23) திகதியிட்ட கடிதத்திலேயே குறித்த விடயத்தைக் குறிப்பிட்ட ஆனந்தசங்கரி, மோசடிக்காரர்களுக்கு எதிராகத் தனது சட்டத்தரணி மூலம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இவர்களை மக்கள் நம்ப வேண்டாம் என்றும், அவர்களுடன் தொடர்பை வைக்க வேண்டாம் எனவும் கடிதம் ஊடாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கல்முனை

# பாடசாலை மூடப்படும் அபாயம்

■ வி.ரி.சகாதேவராஜா



கல்முனை வலயத்துக்குட்பட்ட, நிந்தவூர் கோட்டத்தின் கீழுள்ள அட்டப்பளத்திலுள்ள ஒரேயொரு தமிழ்ப் பாடசாலையான அட்டப்பளம் விநாயகர் வித்தியாலயம், மூடப்படும் அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதிய அளவு ஆசிரியர்கள் இன்மையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 136 மாணவர்கள், 14 ஆசிரியர்கள் காணப்படும் இப்பாடசாலையில் முக்கிய பாடங்களாகக் கருதப்படும் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் ஆகிய இருபாடங்களையும் கற்பிக்கும் ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால், மாணவர்கள் குறித்த பாடங்களைக் கற்க முடியாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பின்தங்கிய பிரதேசத்திலுள்ள ஒரேயொரு பாடசாலையையும் இழுத்துமூடப்படுவதற்கு இவ்விடமாற்றங்கள் செய்யப்படுகின்றனவா என அப்பகுதி மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

அத்துடன், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் ஆலயங்கள் உள்ளிட்ட பொதுநலஅமைப்புகள் இதுவிடயத்தில் போர்க்கொடி தூக்கியுள்ளன.

போதுமான அளவு ஆசிரியர்கள் நியமிக்கப்படாவிடின் தீவிரபோராட்டமொன்றை முன்னெடுக்கப்போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்கள், மாணவர்களின்

# வருகை குறைவு

■ சகா



கிழக்கு மாகாணத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளுக்கு அண்மைக்காலமாக ஆசிரியர்கள், மாணவர்களின் வருகை குறைவடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீப காலமாக ஆசிரியர்கள், மாணவர்களின் மத்தியில் காய்ச்சல், தடிமன், தலைவலி, உடற்சோர்வு போன்ற அறிகுறிகள் காணப்படுவதாகவும் இதனால் அவர்கள் பாடசாலை செல்வதைத் தவிர்த்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக கிழக்கில் பாடசாலைகள் ஏதாவது மூடப்பட்டுள்ளனவா எனக் கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்திடம் கேட்டபோது, “இதுவரை எந்தவொரு பாடசாலையும் மூடப்படவில்லை. எனினும் மட்டக்களப்பு, கல்முனை போன்ற பிரதேசங்களில் சில பாடசாலைகளில் மாணவருக்கு கொவிட்-19 உறுதிப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால், குறித்த பாடசாலைகளின் குறித்த வகுப்புகள் மாத்திரம் மூடப்பட்டுள்ளன.

அதேவேளை மாணவர், ஆசிரியர்களின் வரவும் குறைவடைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன. க.பொ.த உயர்தரப் பரீட்சையை எதிர்கொண்டுள்ள இன்றைய சூழலில், பெற்றோரும் தம் பிள்ளைகள் மீது கூடிய கவனம் செலுத்தவேண்டும்” என்றார்.

# ஆட்பதிவு திணைக்கள கிழக்கு உதவி ஆணையாளர் நியமனம்

■ சகா



ஆட்பதிவு திணைக்களத்தின் கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான உதவி ஆணையாளராக (Asst. Commissioner) இ.திரவியராஜ் (SLAS) நேற்று முன்தினம் (22) பதவியேற்றார்.

அக்கரைபற்று, ஆலையடி வேம்பு பிரதேசத்தை பிறப்பிடமாக கொண்ட இவர், பொத்துவில் பிரதேச செயலாளராகப் பணிபுரிந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புதிய உபவேந்தராக வல்லிபுரம் கனகசிங்கம் கடமையேற்பு

■ பேரின்பராஜா சபேஷ்

கிழக்குப் பல்கழகத்தின் உபவேந்தராக, பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், நேற்று முன்தினம் (22) வந்தாறுமூலை வளாகத்தில் சர்வமத ஆசீர்வாதத்துடன் கடமையேற்றார்.

குறித்த நிகழ்வில் பல்கலைக்கழக பதிவாளர் ஏ. பகிரதன், பிடாதிபதிகள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

முகாமைத்துவப் பேராசிரியரான இவர், இதற்கு முன்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் முதல்வராகப் பணியாற்றியவர் என்பதும், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பத்தாவது உபவேந்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





கல்லடி

# கல்லடியில் கோர விபத்து:

## ஒருவர் உயிரிழப்பு

■ எம் எஸ் எம் நூர்தீன்

மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியில், கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு முன்னால், நேற்று முன்தினம் (22) மாலை 5.30 மணியளவில் கோர விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கல்லடி பிரதான வீதியில் ஆரையம்பதியிலிருந்து, மட்டக்களப்பு நோக்கி தந்தையும் மகனும் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது பிக்கப் வாகனமொன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து பிக்கப் வாகனம் மோதிய வேகத்தில் முன்னால் சென்று கொண்டிருந்த நெல் அறுவடை செய்யும் கனரக இயந்திர வாகனத்துக்குள் மோட்டார் சைக்கிள் சிக்கியதாகவும், இதில் தந்தை ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும் படுகாயமடைந்த மகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் ஆரையம்பதியைச் சேர்ந்த சிவராசா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நெல் அறுவடை செய்யும் இயந்திர வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அம்பாறை

# மீனவர்களுக்கான விசேட வேலைத்திட்டம்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்கள் எதிர்கொள்ளும் கடல் சார் அனர்த்த தவிர்ப்பு முன் ஆயத்தம் தொடர்பான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (22) அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஆழ்கடல் மீனவர்கள் எதிர்கொள்ளும் கடல் சார் அனர்த்த தவிர்ப்பு முன்ஆயத்தம் தொடர்பான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், தென்கிழக்குப் பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பப் பீடத்துடன் இணைந்து, அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆழ்கடல் மீனவர்கள் சுறாவளி மற்றும் கடல் அனர்த்தங்களின் போது அனர்த்த குறைப்பு தொடர்பான தொழில்நுட்ப ரீதியிலான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

மேலும், ஒலுவில் துறைமுக நிர்மாணிப்பின் பின்னர் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களில் கூடுதலான கடலரிப்பு ஏற்பட்டு வருவதால், மீனவர்களும் பொது மக்களும் பல இன்னல்களை எதிர்நோக்கி வருவதாகவும், இதனால் இக் கடலரிப்பினை நிரந்தரமாக தடுப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கப்படவுள்ளதாவும், குறிப்பாக ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு தொலைத் தொடர்பு கருவி (ஜி.பி.எஸ்) பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகின்றது

மலைவாஞ்ஞன்

மத்திய மலை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையை தொடர்ந்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மிக வேகமாக குறைந்து வருகிறது.

காசல்ரீ, மௌசாகலை, கெனியன், லக்ஸபான, நவலக்ஸபான, விமல சுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்துள்ளன.

தேசிய மின் உற்பத்திக்கு பாரிய அளவில் பங்களிப்பு செய்யும் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் என்றுமில்லாதவாறு குறைந்துள்ளது. தற்போது சுமார் 15 அடிவரை தாழ்ந்துள்ளதாக மின்சாரத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் தாழ்ந்து காணப்படுவதால் நீரில் மூழ்கிய கட்டடங்கள் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன. நீரோடைகள், அருவிகளின் நீர் வற்றிக்காணப்படுவதால் சிறிய நீர் மின்உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியும் பாரிய அளவில் குறைவடைந்துள்ளன.

நீர்த்தேக்கங்களின் அருகாமையில் உள்ள பற்றைக்காடுகளுக்கு விசமிகள் மிருகங்களை வேட்டையாடுவதற்காக தீ வைப்பதால், நீரூற்றுகள் அற்றுப்போய், பாரிய குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயமும் காணப்படுகின்றது.

எனவே, காடுகளுக்கு தீ மூட்டுவதனை உடன் நிறுத்துமாறு பொதுமக்களிடம் சூழல் ஆய்வாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வரட்சியான வானிலை தொடர்ச்சியாகக் காணப்படும் பட்சத்தில் விவசாயத்துறையும் பாதிக்கப்பவதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.
எனவே, நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கான விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் வரட்சியான காலப்பகுதியில் மரங்களைத் தறிப்பதை உடன் நிறுத்த வேண்டும் எனவும் பலரும் கோரிக்கை விடுக்கின்றனர்.





## கணினி ஆய்வுகூடம்

பி.கேதீஸ்

வன்னி ஹோப் அவுஸ்திரேலியா மற்றும் ரட்ணம் பவுண்டேசன் பிரித்தானியா ஆகிய நிறுவனங்களின் நிதி அனுசரணையில் கொட்டகலை எதன்சைட் பாடசாலையில் அமைக்கப்பட்ட கணினி ஆய்வுகூடம், நுவரெலியா கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர் எஸ்.மோகன்ராஜினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நுவரெலியா கல்வி வலய தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கான உதவிக் கல்வி பணிப்பாளர் வி. சாந்தகுமார், கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ். ஜெகதீஸ்வரன், வன்னி ஹோப் மற்றும் பி.எஸ்.டி.எப். நிறுவன உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நியமனக் கடிதங்கள் வழங்கிவைப்பு



பி.கேதீஸ்

நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாமல் இருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கான நியமனக்கடிதங்கள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ராமேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு, அம்பகமுவ பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (21) இடம்பெற்றது. இதன்போது அம்பகமுவ பிரதேச செயலாளர் (பதில்) நதீர லக்மால், அம்பகமுவ பிரதேச சபை தவிசாளர் ஜயசங்க பெரேரா , மஸ்கெலியா பிரதேச சபை தவிசாளர் திருமதி கோவிந்தன் செண்பகவள்ளி, அம்பகமுவ பிரதேச செயலகத்தின் உதவி இயக்குநர் நிஷாதி வீரசூரிய, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைவாக இந்த நியமனங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 15 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு





பொகவந்தலாவை நகரில், நுகர்வோருக்கு பொருத்தமற்ற முறையில் உணவுப் பொருட்களை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், அந்நரிலுள்ள வர்த்தகர்களில் 15 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஹட்டன் நீதவான் நீதமன்றத்தில் இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என நுவரெலிகா மாவட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் பந்துல செனவிரத்ன தெரிவித்தார்.

பொகவந்தலாவை சுகாதார வைத்திய அதிகாரி ஆர்.எஸ்.கே. ஜயசூரியவின் கண்காணிப்பின் கீழ், இந்தத் திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

பெருந்தோட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு போஷாக்கான உணவுப் பொருட்களை விநியோகிக்கும் வகையில், பொகவந்தலாவை சுகாதார அதிகாரி காரியாலயத்தின் ஊடாக, பொகவந்தலாவை, டின்சின், கெம்பியன், புளியாவத்தை ஆகிய நகரங்களில் திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதுமட்டுமன்றி, கொட்டகல, லிந்துல, கொத்மலை, மஸ்கெலியா, புதிய திஸ்பன, அம்பகமுவ ஆகிய பிரதேசங்களிலுள்ள பொதுச் சுகாதார அதிகாரிகளால் அந்தந்த நகரங்களில் திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தத் திடீர் சோதனைகளின் போது, சுகாதாரமற்ற நிலையில், ஹோட்டல்கள் நடத்திச் சென்றவர்களுக்கு எதிராக சட்டரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அத்துடன், குறைபாடுகளை நிவர்த்திச் செய்து கொள்வதற்காக 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

## துண்டு பிரசுரங்கள் விநியோகம்



செ.தி. பெருமாள்

ஐக்கிய மக்கள் சக்தியினரால் மஸ்கெலியா நகரில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் பஸ் தரிப்பிடங்களிலும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் துண்டு பிரசுரங்கள் நேற்று (23) காலை விநியோகிக்கப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தி நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் மஞ்சுல சுரவீர ஆராச்சி, கட்சி நிர்வாகிகள் இணைந்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கி, நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை பற்றி எடுத்து கூறி சென்றனர்.



## பந்தமேந்தி ஆர்ப்பாட்டம்

எரிபொருட்கள் விலையேற்றத்தை கண்டித்தும், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்தும் அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினரால், ருவன்வெல்ல நகரில், சனிக்கிழமை (22) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

## ஆய்வுகூட உபகரணங்கள் வழங்கிவைப்பு



தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு ஆய்வுகூட உபகரணங்களை விநியோகிக்க இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் ஏற்பாடு செய்துள்ளார். மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஆய்வு கூட உபகரணங்களை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.















## மஹா கும்பாபிஷேகம்...

நுவரெலியா, அக்கரப்பத்தனை நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழா நேற்று (23) நடைபெற்றது.
19ஆம் திகதி புதன்கிழமையுடன் ஆரம்பித்த கிரியாரம்பத்தை தொடர்ந்து, சனிக்கிழமை (22) எண்ணெய் காப்பு நடைபெற்றது. நேற்றுக்காலை மஹாகும்பாபிஷேக பெருச்சாந்தி பெருவிழா நடைபெற்றது.
சிவஸ்ரீ. சிவகுகேந்திர குருக்களால் செய்து வைக்கப்பட்ட இந்த மஹா கும்பாபிஷேகத்திற்கு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.பி. சக்திவேல், ஆர். ராஜாராம், அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர் கதிர்செல்வன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.
மேலும், தொடர்ந்து 48 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(படங்களும் தகவலும் எஸ். கணேசன், துவாரக்ஷன்)



















# காடுகளுக்குத் தீவைத்து, உயிரினங்களை வேதனைப்படுத்தாதீர்கள்

ஒவ்வோர் உயிரினமும் வாழவேண்டும். அதற்கான சூழலை, அவையவை தேடிக்கொள்கின்றன. அவற்றுக்கு தொந்தரவு கொடுக்காமல் வாழப் பழகிக்கொண்டால், உயிரினங்கள் வேண்டுமென்றே தாக்குவதிலிருந்து ஒவ்வொருவரும் தப்பித்துக்கொள்ளமுடியும்.

நாடளாவிய ரீதியில் தற்போது வரட்சியான வானிலை நிலவுகின்றது. வெளியில் தலைகாட்ட முடியாதளவுக்கு சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருக்கின்றது. நீரேந்தும் பிரதேசங்களின் நீர்நிலைகள் வரண்டுவிட்டன. நீர்த்தேக்கங்களின் மட்டம் கிடுகிடுவென குறைந்துவிட்டது.

அதனை அண்டிய பகுதிகளில் மட்டுமன்றி, பரவலாக காடுகளும் பற்றைக்காடுகளும் காய்ந்துவிட்டன. இலையுதிர் காலம் போல, பெரும்பாலான மரங்கள், இலைகளின்றிக் காய்ந்து போய் நிற்கின்றன.

இதற்கிடையில், பற்றைக் காடுகளுக்கும் காடுகளுக்கும் தீ வைத்தல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. அதில் வாழும் சின்னஞ்சிறிய உயிரனங்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இதேநிலைமை தொடருமாயின், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் என்பதில் ஐயமே இல்லை.

அதுமட்டுமன்றி, அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்படும். மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாத நிலைமையொன்று ஏற்படும். தற்போது அமல்படுத்தப்படும் மின்வெட்டின் நேரம், நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகளும் ஏற்பட்டுள்ளன. ஆகையால், இயற்கையை சீண்டிப் பார்ப்பதைத் தவிர்த்துக்கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

ஒவ்வொரு தப்பான செயலையும் தண்டிக்கும் வகையில், சட்டங்கள் உள்ளன. பலருக்கும் அதுதொடர்பில் போதுமான தெளிவு இருக்காது. காடுகள் அல்லது பற்றைக்காடுகளுக்குத் தீ வைப்பதன் ஊடாக மரங்கள், இலை, செடி கொடிகள் மட்டுமன்றி, சின்னஞ்சிறிய உயிரினங்களும் அவற்றின் வாழிடங்களும் அழிக்கப்படுகின்றன.

அந்த உயிரினங்களின் முட்டைகள் கருக்கப்படுகின்றன. இது பாரிய குற்றங்களின் ஒன்றாகும்.

ஆகையால், காடுகள் மற்றும் வனஜீவராசிகள் பேணலுக்கான சட்டம் தொடர்பில் ஓரளவுக்கேனும் தெரிந்து வைத்திருத்தல் அவசியமாகும். அதில் தெளிவு ஏற்படுமாயின், காடுகளுக்கு தீவைத்தல் முற்றுமுழுதாக நிறுத்தப்படும்.

சுற்றாடலைப் பல்வேறு நிறுவனங்கள் பேணுகின்றன. வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, அரச மரக்கூட்டுத்தாபனம் இப்படியே பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். ஆகையால், அந்தந்த நிறுவனங்கள், காடழிப்பதால் ஏற்படும் தீமைகள், நீதிமன்றங்களின் ஊடாக வழங்கப்படும் தண்டனைகள் உள்ளிட்டவை தொடர்பில் பொதுமக்களுக்குத் தெளிவூட்ட வேண்டும்.

இயற்கையின் மீது அன்பு செலுத்துமாறு சொல்லிக்கொடுக்கவேண்டும். மரம் நடுகையை ஊக்கப்படுத்தவேண்டும். வீட்டுக்கொரு மரம் என்னும் திட்டத்தை இன்னும் பரந்தளவில் முன்கொண்டு செல்லவேண்டும். அதனூடாகவே இயற்கையின் சமநிலையைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இயற்கையின் சமநிலை குழம்பிவிட்டால், பல்வேறான மாற்றங்கள் ஏற்படும். இது சகல உயிரினங்களின் வாழ்க்கை சக்கரத்தைப் புரட்டிப்போட்டுவிடும். ஆகையால், காடுகள், பற்றைக் காடுகளுக்கு தீ வைப்பதை நிறுத்தி, இயற்கையை பாதுகாப்பதற்கு ஒவ்வொருவரும் அர்ப்பணிக்க வேண்டும். அந்தப் பயணத்தை நாளைக்குத் தள்ளிப்போடாமல், இன்றிலிருந்தே ஆரம்பிக்கவேண்டும்.


## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எமது நடத்தைகளால், வார்த்தைகளால் பிறரின் மனம் துன்பப்பட இடமளித்தலாகாது. அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும், எவரது மனமும் துன்பத்துக்கு உள்ளாக வழிவகுத்தலாகாது.

இத்தகைய கொள்கை நிலையில் வாழ்வது சிரமமானதல்ல! தேவையற்ற விமர்சனங்கள், பராமுகத்துடன் எவரையும் நிராகரித்தல் போன்ற குணாதிசயங்கள் வெறுக்கத்தக்க செயல்களாகும். சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல!

ஒருவர், தனது வாழ்க்கையில் தனக்கான கௌரவம், உரிமை, சுதந்திரம் போன்றவைகளில் அக்கறை கொண்டே இயங்குகின்றார். இந்த அக்கறையுடன் வாழ்பவர், மற்றையவர்களின் மனநிலை பற்றியும் உணரவேண்டும். மனிதன், உணர்வில்லாத சடப்பொருள் அல்ல; கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

### தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைக்கான

# அறைகூவலும் சாத்தியமின்மையும்




என்.கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


இலங்கை தமிழர் அரசியலை, குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர் அரசியலைப் பொறுத்தவரையில், அதைப் பற்றிப் பேசும் அரசியல்வாதிகள் உள்ளிட்ட அனைவரும், தமிழர் அரசியலில் 'ஒற்றுமை' வேண்டும் என்று கூறுவது, உலக சமாதானம் வேண்டும் என்று உலகத் தலைவர்கள் சொல்வது போன்ற சம்பிரதாயபூர்வமான சொற்றொடராகவே மாறிப்போயுள்ளது.

தமிழர் அரசியலைப் பற்றி கருத்துரைப்பவர்கள், தமிழர் அரசியலில் ஒற்றுமை இல்லை என்றும், தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்றும் சொல்வதை, பெரும்பாலும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

அந்தப் பொது மனநிலைக்குத் தீனி போடுமாற்போல, அரசியல்வாதிகளும் அவ்வப்போது ஒற்றுமைக்கான அறைகூவலையும் சிலவேளைகளில் ஒற்றுமையின்மை பற்றிய ஒப்பாரியையும் அரங்கேற்றுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால், இதைப்பற்றி யாரும் கொஞ்சமேனும் அலசியாராய்ந்து பார்த்ததாகத் தெரியவில்லை.

தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை என்று இங்கு பொதுவாக விளிக்கப்படுவது, கொள்கையளவில் வேறுபட்டிருக்கும் தமிழ்க் கட்சிகளிடையேயான ஒற்றுமையை அல்ல. மாறாக கொள்கையளவில் ஒற்றுமைகளைக் கொண்ட கட்சிகளிடையேயான ஒற்றுமையைத்தான்.

அது என்ன கொள்கையளவிலான ஒற்றுமை என்று சிலர் வினவலாம். தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசத்தின் அபிலாஷைகளாக தீர்க்கமாக இனங்காணப்பட்டுள்ள தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவையே தமிழ்த் தேசிய அரசியல் கொள்கைகளாக ஏற்கப்பட்டுள்ளன. 'தமிழ்த் தேசிய கட்சி'களாகத் தம்மை முன்னிறுத்துபவை, இதையே தமது அடிப்படைக் கொள்கையாக முன்னிறுத்துகின்றன.

இந்த அபிலாஷைகளை அடைந்துகொள்வதற்கான வழிவகைகள், ஆரம்பப்புள்ளி, அணுகுமுறை பற்றி அவற்றிடையே சில கருத்து வேறுபாடுகளை அடையாளம் காண முடியுமாயினும், அவற்றின் நோக்கங்களில் பெரும் வேறுபாடுகள் இல்லை.

மறுபுறத்தில், தமிழ் அரசியல் பரப்பில், தேசிய கட்சிகளும் தேசிய கட்சிகளோடு கூட்டணியிலுள்ள கட்சிகளும் உண்டு. இந்தக் கட்சிகளைச் சார்ந்த தமிழ் அரசியல்வாதிகள், தமிழ்த் தேசியத்தின் சில பகட்டாரவாரக் கருத்துகளை முன்வைத்தாலும், தமிழ்த் தேசியம் பற்றி, சமஷ்டி பற்றியெல்லாம் பேசுவதில்லை.

அது தேசிய கட்சிகளின் கொள்கையோடு சில இடங்களில் முரண்படும் என்பது அதற்குக் காரணமாக இருக்கலாம். ஆகவே இவர்கள் அதிகமாக அபிவிருத்தி பற்றிப் பேசுவதையும், ஆதரவுத்தள அரசியலை முன்னெடுப்பதையும் நாம் காணலாம்.

தேசிய கட்சிகளோடு, தமிழ்த் தேசிய அரசியல் கொள்கை ரீதியில் ஒன்றுபட முடியாத நிலை இருப்பதால், தமிழ் அரசியலில் ஒற்றுமை பற்றிப் பேசுபவர்கள், இந்தத் தேசிய கட்சிகள் மற்றும் தேசிய கட்சிகளோடு கூட்டணியில் உள்ள கட்சிகளை அந்த 'ஒற்றுமை' எனும் பெயருக்குள் உள்ளடக்குவதில்லை.

அப்படியானால், இங்கு தமிழ் அரசியலில் ஒற்றுமை என்பது, தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகளிடையேயான ஒற்றுமை என்ற பொருளிலேயே பயன்படுத்துவதை புரிந்துகொள்ளலாம்.

அப்படியானால், தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதில் என்ன சவால்கள் இருக்கின்றன என்ற கேள்வி எழுகிறது. அந்தக் கேள்விக்கு விடை காணும் முன்பு, தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகளிடையே, ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான தேவை என்ன என்பது பற்றியும் சிந்தித்தல் அவசியமாகிறது.

தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதற்கா, தேர்தல் அரசியல் தவிர்த்த பிரதான காரணமாகக் குறிப்பிடப்படுவது, 'ஒரே குரலாக ஒலிக்கும் போது, அந்தக் குரல் பலமான குரலாக இருக்கும்' என்பதும், தேர்தல் அரசியல் காரணமாகச் சொல்லப்படுவது, 'வாக்குச் சிதறலைத் தவிர்ப்பதன் மூலம், அதிக பிரதிநிதிகளை தமிழ்த் தேசிய கட்சிகளால் வென்றெடுக்க முடியும்' என்பதுமாகும்.

ஒரு குரலாகத் தமிழ்த் தேசிய கட்சிகள், தமிழ் மக்கள் பிரச்சினைகளுக்காகக் குரல்கொடுக்கும் போது, அந்தக் குரல் பலமானதாகத்தான் இருக்கும். ஒரு குரலைவிட, பல குரல்கள் எப்போதும் பலமானவையே. ஆனால், மக்கள் பிரச்சினைக்காக குரல்கொடுக்க எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து, ஒரு கட்சியாக இருந்தால்தான் அது சாத்தியம் என்று சொல்வதில் எந்த உண்மையுமில்லை. வேறுவேறு கட்சிகளாக இருந்தால் கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக, அவை ஒன்றாகக் குரல் கொடுக்க முடியும்.

ஒரே கட்சியாகவோ கூட்டணியாகவோ இணைந்துவிட்டால் மட்டும் தான், எல்லோரும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பார்கள் என்று சொல்வதில் உண்மையிருக்க முடியாது. ஆகவே, இந்த ஒற்றுமைக்கான தேவைக்கான உண்மையான காரணமாக இருப்பது, தேர்தல் அரசியல் காரணிகள்தான்.

வாக்குச் சிதறலால், தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பிளவுபட்டுவிடக்கூடாது என்பதை முன்வைத்துத்தான், தேர்தல் அரசியல் காரணத்துக்காகவேதான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூட உருவானது. இது உருவான போது, அதில் அங்கம் வகித்த எல்லாக் கட்சிகளுக்கும் அந்த ஒற்றுமை தேர்தலில் நல்ல பலனைத் தந்தது. இது கூட்டமைப்பில் போட்டியிட்டால், வெற்றிபெற்றுவிடலாம் என்ற தேர்தல் ஆதாயம்தான் 'கூட்டமைப்பு' என்ற எண்ணக்கருவுக்கு வலுச்சேர்ப்பதாக இருந்தது.

'தமிழ்த் தேசியம்', 'ஒற்றுமை', 'ஏக பிரதிநிதிகள்' என்ற குறியீடுகளின் மதிப்பு, தேர்தல் அரசியலில் முக்கியத்துவம் பெற்றது. ஆகவே, கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கான ஆசனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, தேர்தல் அரசியலில் கேள்வி அதிகமாக இருந்தது. அது, கட்சிகளிடையே ஆசனப்பங்கீட்டுப் பிரச்சினைகளை உருவாக்கியது. கூட்டமைப்புக்குள் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட கட்சி, தனது மேலாதிக்கத்தை செலுத்தத்தொடங்கிய போது, அங்கு பிளவுகள் ஏற்பட்டன.

கூட்டமைப்புக்குள் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட கட்சியோடு இன்றும் ஒட்டிக்கொண்டிருக்கும் கட்சிகள், தேர்தல் ஆதாயத்துக்காக மட்டும்தான் அங்கு ஒட்டிக்கொண்டு நிற்கின்றன என்றால் அது மிகையல்ல.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கும் எழுச்சிக்கும் பின்பு, கடந்த பொதுத் தேர்தல்தான் அதற்கு மிகச் சவாலான தேர்தல் எனலாம். கூட்டமைப்பைத் தாண்டிய தமிழ் வேட்பாளர்கள், கணிசமான வெற்றியைப் பெற்றிருந்தார்கள்.

இதனால், கூட்டமைப்பில் தேர்தல் கேட்டால் வெற்றிதான், என்று மக்கள் பணிசெய்யாது, கூட்டமைப்பு ஆசனத்தில் அமர்ந்து தேர்தல் ருசி கண்டவர்கள் பலர்; கூட்டமைப்பு பெற்றுக்கொண்ட ஆசனங்கள் குறைவடைந்ததனால் தேர்தலில் தோல்வி கண்டிருந்தனர்.

மேலும், ஒரே கூட்டமைப்பாக இயங்கும் போது, தமக்கள் சிலர் விடும் பிழைகளைக் கூட விமர்சிக்க முடியாது. இது தமிழ்த் தேசிய அரசியலுக்குள் அரசியல் ஜனநாயகத்தை மட்டுமல்ல, பொறுப்புக்கூறலையும் இல்லாதொழிப்பதாகவே அமையும்.

இந்தப் பின்புலத்தை வைத்துப் பார்க்கும் போது, இங்கு அரசியல்வாதிகளிடமிருந்து வரும் ஒற்றுமைக்கான கோஷம் என்பது, தேர்தல் அரசியல் சார்ந்ததாகவே இருக்கிறதேயன்றி, அது கொள்கைக்கானதாகவோ, மக்களுக்கானதாகவோ இல்லை.

மேலும், இத்தகைய தேர்தல் ஒற்றுமை என்பது, அந்தக் கூட்டமைப்புக்குள் ஆதிக்கம் செலுத்தும் கட்சிக்கு சாதகமானதாகவே இருக்கும். தமிழ் மக்கள் விரும்பும் ஒற்றுமை, இத்தகைய தேர்தல் அரசியல் சார்ந்த ஒற்றுமையை அல்ல.

இங்குதான் மக்கள் கேட்கும் 'ஒற்றுமை'க்கும், அரசியல்வாதிகள் கேட்கும் ஒற்றுமைக்கும் வேறுபாடுண்டு. இங்கு மக்கள் விரும்பும் 'ஒற்றுமை' என்பது, மக்கள் பிரச்சினைகளில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்பதையே!

அந்த விடயத்தில், தேர்தல் அரசியல், சுயநலக் காரணிகள் என்பவை தலையிட்டுவிடக்கூடாது என்பதே, தமிழ் மக்களின் அவா!

ஆனால், தமிழ்த் தேசிய அரசியலில் மக்கள் மையப் பணியொன்று, ஒரு தரப்பால் அல்லது கட்சியால் முன்னெடுக்கப்படும் போது, எங்கே அது வெற்றிபெற்றுவிட்டால், அது அந்தத்தரப்பினது அல்லது கட்சியினது வெற்றியாகிவிடும் என்று மக்கள் எண்ணிவிடுவார்களோ என்று, ஏனைய தரப்புகள் மற்றும் கட்சிகள் அதற்கு ஆதரவு தர மறுக்கின்றன. இந்த நிலை மாற வேண்டும்.

இதற்காகத்தான் தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ள கட்சிகள் அனைத்தும், ஓர் அரங்கத்தில், அல்லது வட்டமேசையில் இணையவேண்டும். அது தேர்தலைக் கடந்த தமிழ்த் தேசத்துக்காகக் குரல்கொடுக்கின்றன அரங்கமாக மாற வேண்டும். அதுதான் நீடித்து நிலைக்கத்தக்க ஒற்றுமையாக இருக்கும்.

தேர்தலை மையப்படுத்திய ஒற்றுமை என்பது, அடிபாடுகளிலும் முரண்பாடுகளிலும்தான் முடியும். ஏனென்றால், தேர்தலுக்கான ஒற்றுமை என்பது மக்களை மையப்படுத்தியதல்ல; அது தனிநபர்களின் தேர்தல் ஆதாயங்களை மையப்படுத்தியது. இந்த இடத்தில்தான், தமிழ்த் தேசத்தின் அரசியலும் ஒற்றுமைக்கான அறைகூவலும் தோற்றுக்கொண்டிருக்கின்றன.

## கடிதங்கள்

### கந்தளாய் பேராறு ஆற்றில் குப்பை கூழங்கள்

பேராறு ஆற்றில் குப்பை கூழங்களை நாளாந்தம் கொட்டுவதால், நீர் அசுத்தமடைந்து வருகின்றமை குறித்து கவலை தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பேராறு ஆற்றில், குப்பை கூழங்களை தினமும் கொட்டுவதால், நீர் அசுத்தமடைந்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய், பேராற்றுவெளி ஆற்றின் அருகாமையில், முஸ்லிம் மையவவாடி ஒன்று உள்ளது. அதன் பாலத்தின் கீழ், குப்பைகளைக் கொட்டுவதால் ஆற்றின் நீரோட்ட வேகம் குறைந்தும் தடைப்பட்டும் நிற்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இறந்த விலங்குகளின் கழிவுகள், வீட்டுக் குப்பை கூழங்களை தினமும் இங்கு கொட்டுவதால், அப்பகுதியில் வசிப்போருக்கு துர்நாற்றம் வீசி வருவதோடு சுற்றுச் சூழலுக்கும் தீங்கு விளைவித்து வருவதாகவும் பாதிக்கப்படும் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய், பேராறு ஆறானது, கந்தளாய் குளத்திலிருந்து திறந்து விடப்பட்டு பேராற்றுவெளி, பேராறு, தம்பலகாமம் ஊடாக திருகோணமலை, கொட்டியாரக்குடா களப்பைச் சென்றடைகின்றது.

முறைமை அற்றுக் குப்பையைக் கொட்டும் இந்தநிலை தொடர்பாக, அப்பகுதியிலுள்ள பேராற்றுவெளி பள்ளிவாயலுக்கும், கந்தளாய் பிரதேச சபைக்கும் அறிவித்தும், எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளவில்லை எனவும் அப்பகுதியில் வசிப்போர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக, கந்தளாய் பிரதேச சபை பொதுமக்களிடமிருந்து முறைமையாக குப்பையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

–எப். முபாரக்

சென்னை:

பொங்கல் பரிசில் கலப்படம்:

# சிக்கப் போகும் தலைகள்

தமிழ்நாட்டில் ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 20 பொருட்கள் அடங்கிய சிறப்பு பரிசுத் தொகுதி வழங்கப்பட்டது. இந்தப் பரிசு பொருட்கள், சில இடங்களில் தரமற்று இருப்பதாக புகார் முன்வைக்கப்பட்டது. அதாவது புளி, மஞ்சள் தூள், மிளகாய் தூள், மிளகில் கலப்படம் செய்யப்பட்டு இருந்ததாகவும், மற்ற பொருட்கள் சில தரமற்று இருப்பதாகவும் புகார் வைக்கப்பட்டது.

இந்தப் புகார்கள் குறித்து, முதலமைச்சர் ஸ்டாலின், இரண்டு நாள்களுக்கு முன்னர் ஆலோசனை செய்தார். அதன்படி, கலப்பட பொருட்களை வழங்கிய நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களிடம் மீண்டும் பொருட்களை வாங்க கூடாது. அவர்களுக்கு டெண்டர் விடுக்க கூடாது. அரசு டெண்டர்களில் இருந்து அவர்களை பிளாக் லிஸ்ட் செய்ய வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டார்.

இந்த நிலையில்தான், இது தொடர்பாக நீண்டபட்டியல் தயாராகிக்கொண்டு இருக்கிறது. தரமற்ற பொருட்களை வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இலவசமோ, பரிசு பொருளோ.. இது அரசின் நலத்திட்டம். கடமைக்கு பொருள் வழங்க கூடாது. அதிகாரிகள் இதை எப்படி கவனிக்காமல் போனார்கள் என்று முதலமைச்சர் ஸ்டாலின் கண்டிப்புடன் பேசியதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில்தான் டெண்டர் விடப்பட்ட நிறுவனங்களின் லிஸ்டை பொதுவில் வெளியிட அரசு தரப்பு முடிவு செய்துள்ளது. இந்த நிறுவனங்கள்தான் டெண்டர் எடுத்தன. இவர்கள்தான் முறைகேடு செய்தனர். அதனால் இனி அவர்களிடம் பொருட்களை வாங்க மாட்டோம். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்று அரசு தரப்பு லிஸ்ட் ஒன்றை வெளிப்படையாக வெளியிட இருக்கிறது. இதேபோல், அதிகாரிகளின் லிஸ்டும் தயார் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் அவர்கள் மீதும் நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் என்று முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டதாக தகவல்கள் வருகின்றன.

இதேவேளை, திருமண விழாவொன்றில் கலந்துகொண்டு பேசிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், "பிறக்கின்ற குழந்தைக்கு அழகான தமிழ் பெயரை சூட்டுங்கள். உங்களுக்கு ஒரு சந்தேகம் வரலாம். உங்களுக்கு மட்டும் என்ன தமிழ் பெயரா..? என்று கேட்பீர்கள்.

ரஷ்யாவில் ஜோசப் ஸ்டாலின் இறந்த நிலையில், கடற்கரையில் இரங்கல் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, அப்போது ஒரு சீட்டு, கலைஞரிடம் கொடுக்கப்பட்டது. அந்தச் சீட்டில், 'உங்களுக்கு மகன் பிறந்திருக்கிறான்' என்ற செய்தி எழுதப்பட்டிருந்தது. அங்கேயே "எனக்கு மகன் பிறந்திருக்கிறான்; அந்த மகனுக்கு ஸ்டாலின் என்று பெயர் சூட்டுகிறேன்" என்று தெரிவித்தார். என்னுடைய அண்ணன்கள் மு.க.முத்து, மு.க.அழகிரி, தம்பி தமிழரசு, தங்கைகள் கனிமொழி, செல்வியாக இருந்தாலும் எல்லோருக்கும் தமிழ் பெயர்கள்தான். ஸ்டாலின் பெயரை சூட்டுவதற்கு முன்பு, எனக்கு 'அய்யாதுரை' என பெயர் வைப்பதாக இருந்தது. 'அய்யா' என்றால் தந்தை பெரியார். 'துரை' என்றால் அண்ணாவின் பெயருக்கு பின்னால் வரக்கூடிய துரை. என்று வைக்க வேண்டும் என்று கருதி இருந்தார்கள்.

சித்ரதுர்கா:

மதம் மாற்ற முயற்சித்த மனைவி:

## பொலிஸாரிடம் கணவன் புகார்

பலவந்தமாக மதம் மாற்றம் செய்ய முயற்சித்த மனைவி மற்றும் அவரது குடும்பத்தினர் மீது பொலிஸாரிடம் கணவன் புகார் செய்துள்ளார்.

விஜயநகர், ஹொஸ்பேட் கொலனியில் வசிப்பவர் மாரப்பா. இவருக்கும் சரளாவுக்கும் 2020 ஜூலையில் திருமணம் நடந்தது. பெண்ணின் தந்தை வசந்தகுமாரும் அவரது குடும்பத்தினரும் கிறிஸ்துவ முறைப்படி திருமணத்தை நடத்தியிருந்தார்கள்.

மாரப்பா, இந்து கடவுளை பூஜித்த போது, அவரது மனைவியும் மாமனாரும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். பிரசவத்துக்காக மனைவி, டிசெம்பரில் தாய் வீட்டுக்கு சென்றுள்ளார். குழந்தையும் பிறந்தது. மாரப்பா தன் மனைவி, குழந்தையை பார்க்கச் சென்ற போது, மாமனார் குடும்பத்தினர் தகராறு செய்தனர். கிறிஸ்துவ மதத்துக்கு மாறும்படி கட்டாயப்படுத்தினர். இதனால் மனம் நொந்த மாரப்பா, பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

புதுடில்லி:

## காங்கிரஸில் அதிக செல்வாக்குள்ள நபர்



காங்கிரஸில் இப்போது அதிக செல்வாக்குள்ள நபராக பேசப்படுபவர் சுப்ரியா ஸ்ரீநாட்டே. கட்சியின் செய்தி தொடர்பாளரான இவர், முன்னாள் பத்திரிகையாளர்; பொருளாதார விஷயங்கள் தெரிந்தவர்.

கடந்த லோக்சபா தேர்தலில், உத்தர பிரதேசத்தில் போட்டியிட இவருக்கு சீட் தரப்பட்டது. ஆனால், மோடி அலையில் தோற்றுப் போனார். இவர் எப்போது வேண்டுமானாலும் ராகுல், பிரியங்காவை பார்த்து பேசக் கூடிய அளவுக்கு செல்வாக்கு மிக்கவர்; இது சீரேஷ்ட தலைவர்களிடையே வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய பொருளாதாரம் தொடர்பாக சுப்ரியா அளித்த பேட்டியை காங்கிரஸின் மூத்த தலைவர் சிதம்பரம் கண்டித்தார். "பொருளாதார விஷயங்களில் தலையிட வேண்டாம்" என, சிதம்பரம் கூற, "பொருளாதார விஷயத்தில் நீங்கள் எனக்கு பாடம் கற்றுத் தர வேண்டாம்" எனக் கூறிவிட்டாராம் சுப்ரியா.

இராய்ச்சூர்:

## பொலிஸ் நிலையத்தில் குரங்கு சேட்டை

பொலிஸாரைக் கண்டால், பலரும் அஞ்சி நடுங்குவர். ஆனால், குரங்கொன்று, பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்து, பொலிஸாரையே மிரட்டுகிறது. இராய்ச்சூர் தேவதுர்கா, ஜாலஹள்ளி பொலிஸ் நிலைய பொலிஸார், புதிய பிரச்சினையை சந்தித்துள்ளனர்.

நான்கைந்து நாள்களாக, குரங்கொன்று பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்து பொலிஸாரை மிரட்டுகிறது. திடீரென பொலிஸ் நிலையத்துக்குள் நுழையும் குரங்கு, பொலிஸார் அமர்ந்துள்ள இருக்கைக்கு அருகில் சென்று, தொந்தரவு செய்கிறது. எவ்வளவு முயற்சித்தாலும் அதை விரட்ட முடியவதில்லை.

இரவு பணியாற்றும் பொலிஸாருக்கு, குரங்கால் அவதிப்படுகின்றனர். இது குறித்து வனத்துறையினருக்கு, பொலிஸாலர் தகவல் தெரிவித்தனர். வனத்துறையினரும் பொலிஸ் நிலையத்துக்கு வந்து, குரங்கைப் பிடிக்க முயற்சித்தனர். ஆனால், அது யாருடைய கைக்கும் சிக்காமல் ஓடி மறைகின்றது.

சென்னை:

## மாநில உரிமையை பறிப்பதா?

### மத்திய அரசுக்கு கமல் கண்டனம்

மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கும் வகையில், ஐ.ஏ.எஸ் அதிகாரிகளின் பணி விதிகளில் திருத்தம் செய்யும் முடிவை, மத்திய அரசு கைவிட வேண்டும் என கமலஹாசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமலஹாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

மாநிலங்களில் பணிபுரியும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ் அதிகாரிகளை தேவைப்படும் போது, மாநில அரசின் அனுமதியின்றி, மத்திய அரசின் பணிகளுக்கு அழைத்துக் கொள்ளும் அதிகாரத்தை, இந்திய ஆட்சிப் பணி விதி 6ன் புதிய திருத்தம் வழங்குகிறது. இந்த புதிய திருத்தம், மாநில அரசின் உரிமைக்கு முற்றிலும் எதிரானது. இதனால், நிர்வாக ரீதியாக மாநில அரசுகளுக்கும் மக்களுக்கும், குடிமைப் பணி அதிகாரிகளுக்கும் ஊறு ஏற்படும்.

கூட்டாட்சித் தத்துவத்தைப் பின்பற்றும் நாட்டில், மாநில அரசின் உரிமைகளை அர்த்தமற்றதாக்கும். என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை:

## இலங்கையால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளுக்கு நிவாரணம்

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 125 விசைப்படகு உரிமையாளர்களுக்கு 5.66 கோடி இந்திய ரூபாய் நிவாரணமும் பருவமழைக் காலத்தில் சேதமடைந்த 105 மீன்பிடி படகுகள், உபகரணங்களுக்கு இழப்பீடாக ரூ.5.66 கோடி என மொத்தம் ரூ.11.32 கோடி வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை (21) முதலமைச்சர் ஸ்டாலின், பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து கோரிக்கைகளை கேட்டறிந்தார். அப்போது, இலங்கை சிறையில் உள்ள மீனவர்களின் விடுதலை குறித்தும், இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப் பட்ட படகுகளுக்கு உரிய நிவாரணம் கோரியும் வலியுறுத்தினர்.

இந்நிலையில், முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்பில், இலங்கை கடற் படையால் பறிமுதல் செய்யப்பட்டு தற்போது இலங்கையில் தரித்துவைக்கப்பட்டிருக்கும் 125 படகுகளின் உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தைக் காத்திடும் பொருட்டு, 108 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூபாய் ஐந்து இலட்சம் வீதமும், 17 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூபாய் 1.50 இலட்சம் வீதமும் வழங்கப்படும்.

கோவை:

வியாபாரியை துப்பாக்கியால் சுட்ட வழக்கு:

## இலங்கையை சேர்ந்த இருவரை தேடும் பணி தீவிரம்

கோவையில் 1990ஆம் ஆண்டு நடந்த துப்பாக்கிச்சூடு வழக்கில் தலைமறைவான இலங்கையைச் சேர்ந்த இருவரைத் தேடும் பணியை பொலிஸார் தீவிரப்படுத்தி உள்ளனர்.

கோவையைச் சேர்ந்த சீனியப்பன் காய்கறி வியாபாரி. இவர், 1990ஆம் ஆண்டு, காய்கறி வியாபாரத்தை முடித்துக் கொண்டு, வீடு செல்லும் வழியில் உள்ள கோவிலில் சாமி கும்பிட்டார்.

அப்போது, இருவர் சீனியப்பனை துப்பாக்கியால் சுட்டுவிட்டு, பணத்துடன், வாகனத்தையும் திருடிச் சென்றனர். புகாரின் பேரில், விசாரணையை முன்னெடுக்கப்பட்டது. அதன்போது, மட்டக்களப்பை சேர்ந்த லீமா என்ற மகேந்திரன் (அன்றைய வயது 25), கொடிகாமத்தைச் சேர்ந்த ராஜ் என்ற ஆனந்தராஜ் (அன்றைய வயது 28) ஆகியோரை கைது செய்தனர். இருவர் மீதும் 1991 இல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. 28.07.1992 இல் நிபந்தனை பிணையில் சென்ற இருவரும், அதன் பின்னர் ஆஜராகவில்லை. இவர்களுக்கு பிணை உறுதி அளித்தவர்களும் அந்த முகவரியில் இல்லை. எனவே, இருவருக்கும் பிடியாணை பிறப்பித்து நீதிபதி உத்தரவிட்டார். இது தற்போது வரை நிலுவையில் உள்ளது.

## சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்களுக்கு கௌரவிப்பு




Women in Management இனால் IFC மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆகியன இணைந்து சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் விருதுகள் 2021 நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இதன் போது இலங்கை மற்றும் மாலைதீவுகளில் தமது துறைகளில் சிறப்பாக செயலாற்றியிருந்த நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் கௌரவிக்க ப்பட்டிருந்தனர்.

11ஆவது ஆண்டாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது விருந்தோம்பல், வங்கி மற்றும் நிதியியல், சரக்குக் கையாளல் மற்றும் விநியோக சங்கிலிகள், தொழில்முயற்சியாண்மை, ஊடகம், சட்டம் போன்றவற்றுடன், தாம் தெரிவு செய்த தொழில்நிலைகளில் அல்லது தமது சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு ஊக்குவிப்பாக திகழ்ந்தமைக்காக கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த விருதுகள் வழங்கலின் போது, பணியிடங்களில் பெண்களின் வளர்ச்சி மற்றும் அவர்களுக்கு வலுவூட்டல் வழங்கியிருந்த இலங்கையின் நிறுவனங்களின் செயற்பாடுகளும் பாராட்டப்பட்டிருந்தன.

இந்த விருதுகள் வழங்கலின் போது உயர்ந்த விருதுகள் வைத்தியர். மஹேஷி ராமசாமி (ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண் நிபுணர்), பேராசிரியர் நதீரா கருணாவீர (ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண்), அருணி குணதிலக (Trail Blazer), ரந்துலா டி சில்வா (ஆண்டின் சிறந்த கேம் சேஞ்ஜர்), கலாநிதி வஜிரா சித்ரசேன (நடுவர்களின் தெரிவு) போன்ற விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. விருதுகளின் வெற்றியாளர்கள் பற்றிய முழு விவரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் 470க்கும் அதிகமான வெற்றியாளர்களைக் கொண்டுள்ளதுடன், நாட்டின் நிலைபேறான மற்றும் உள்ளடக்கமான பொருளாதார வளர்ச்சியில் தலைவர்களாக, ஊழியர்களாக, தொழில் முயற்சியாளர்களாக, பங்காளர்களாக ஆற்றும் பங்களிப்புகளை கௌரவித்து வெளிக் கொணரும் வகையில் சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் விருதுகள் அமைந்துள்ளன.

சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் விருதுகள் 2021 க்கு டயலொக் அனுசரணை வழங்கியிருந்ததுடன், தங்க அனுசரணையாளர்களாக Salota International, சிங்கர் இணைந்திருந்தன. வெள்ளி அனுசரணையாளர்களாக லங்கா ஐஓசி, யுனிலீவர், விஷன் கெயார், எயிட்கன் ஸ்பென்ஸ் ஆகியன இணைந்திருந்தன. நிகழ்வின் அனுசரணையாளர்களாக மலிபன், சம்பத் வங்கி ஆகியனவும் இணைந்திருந்தன. நிகழ்வின் அன்பளிப்புப் பங்காளராக New Vivya கைகோர்த்திருந்தது.

இந்த ஆண்டின் நடுவர் குழுவின் தலைவராக நதீஜா தம்பையா இயங்கியதுடன், குழுவில் Hayleys Agriculture Holdings Ltd முகாமைத்துவ பணிப்பாளர் ஜயந்தி தர்மசேன, Dreamron Group of Companies குழும முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கிஷு கோமஸ், Daily FT பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நிஸ்தார் கசிம், Clootrack இலங்கை/மாலைதீவுகள் மற்றும் பாகிஸ்தான் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஹான் அதுகோரல, Dialog Axiata PLC இன் குழு பிரதம வாடிக்கையாளர் அதிகாரி சான்ட்ரா டி சொய்ஸா, தந்திரோபாய சந்தைப்படுத்தல் நிபுணர் சந்தியா சல்காடோ, KL.LK பிரதம நிறைவேற்று அதிகாரி சந்தோஷ் மேனன், இலங்கைக்கான இடைக்கால அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் அமன்டா ஜுவெல், IFC இன் Women in Work இல் நிகழ்ச்சி முகாமையாளர் சாரா ட்விக் ஆகியோர் அடங்கியிருந்தனர்.




## இலங்கை தடகள விளையாட்டுச் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு கொண்டாட்டங்கள்

இலங்கை தடகள விளையாட்டுச் சங்கம் தனது நூற்றாண்டு நிறைவு விழாவை இந்த ஆண்டு முழுவதும் தொடர் விளையாட்டு நிகழ்வுகளுடன் கொண்டாடவுள்ளதாக அறிவித்துள்ளது. அமெச்சூர் தடகள சங்கம் என்ற பெயரில் முன்னர் அறியப்பட்ட இலங்கை தடகள விளையாட்டுச் சங்கமானது சர்வதேச தடகள சம்மேளனத்துடன் இணைந்து 1922 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதியன்று நிறுவப்பட்டது.

அதன் நூற்றாண்டு நிறைவு கொண்டாட்டங்களின் ஆரம்பத்தை குறிக்கும் வகையில், இலங்கை தடகள விளையாட்டுச் சங்கம் அரை மரதன் மற்றும் தேகாரோக்கிய ஓட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் நெஸ்லே நிறுவனத்தின் நெஸ்டமோல்ற்று அனுசரணை வழங்கியது. இது 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையின் மிகப்பெரிய மரதன் போட்டிகளுக்கு அனுசரணையாளராகவும் ஏற்பாட்டாளராகவும் இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையர்களுக்கு அவர்களின் அபிலாஷைகளை அடைந்து கொள்ள உதவும் வர்த்தகநாமத்தின் நோக்கத்திற்கு அமைவாக செயற்பட்டு, நெஸ்லே நிறுவனத்தின் நெஸ்டமோல்ற்று பரந்த அனுபவத்திற்கான மேடைகளை உருவாக்குவதன் மூலம் பல இலங்கை விளையாட்டு வீரர்களின் வாழ்க்கையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை தடகள விளையாட்டுக்கள் சங்கத்தின் மகத்தான பயணத்தில் பல்வேறு தடவைகள் அதனுடன் கைகோர்த்துள்ள நெஸ்லே நிறுவனத்தின் நெஸ்டமோல்ற்று தற்போது அதன் நூற்றாண்டு நிறைவு கொண்டாட்டங்களுக்கு சாதகமான ஆரம்பத்தை வழங்கும்.

21 கிலோ மீற்றர் தூரம் கொண்ட அரை மரதன் போட்டியில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் பங்கேற்றிருந்தனர். தியத்த உயனவில் இருந்து ஆரம்பமாகி, அத்துல் கோட்டே சந்தி, சிறிகொத்தா, பாகொட வீதி, நுகேகொடை சுப்பர் மார்க்கெட் சந்தி, நுகேகொடை ஹைலெவல் வீதி, மஹரகம, பன்னிப்பிட்டிய, பொரளை வீதி, தலவத்துகொட, பத்தரமுல்லை சந்தி ஊடாக மீண்டும் தியத்த உயனவில் நிறைவடைந்தது. பல தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு இலங்கை தடகள விளையாட்டுச் சங்கம் அழைப்பு விடுத்திருந்ததுடன், ஏறத்தாழ 250 விளையாட்டு வீரர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர்.

மேலும், அதே நாளில் 5 கிலோ மீற்றர் தூரம் கொண்ட தேகாரோக்கிய ஓட்ட நிகழ்வும் இடம்பெற்றது. தியத்த உயனவில் இருந்து ஆரம்பித்த இந்தப் போட்டி, பாராளுமன்ற வீதி, பாலம் துண சந்தி, பத்தரமுல்லை சந்தி ஊடாகச் சென்று மீண்டும் தியத்த உயனவில் நிறைவடைந்தது. சுமார் 1,500 பேர் இந்த நிகழ்வில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய அரபு இரா.

# ட்ரோன்களுக்குத் தடை

ஏமன் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களால் அண்மையில் அபு தாபியில் ஆளில்லா ட்ரோன் விமானம் மற்றும் ஏவுகணை மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் மூவர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்நிலையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஒரு மாத காலத்திற்கு ட்ரோன் உரிமையாளர்கள், பயிற்சியாளர்கள், ஆர்வலர்கள் ஆளில்லா விமானங்களை பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலகு ரக விளையாட்டு விமானங்களையும் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது. இக் காலக்கட்டத்திற்குள் வழிகாட்டு நெறிமுறைகளை மீறி செயல்படுபவர்கள் சட்டப்பூர்வ நடவடிக்கைக்கு ஆளாவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் முக்கிய வேலைக்காகப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தேவைக்கான விதிவிலக்கு மற்றும் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும்



தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த தாக்குதல் காரணமாக கச்சா எண்ணெய் விலை கடந்த ஏழு வருடங்களாக இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. கச்சாய் எண்ணெய் சேமித்து வைக்கும் கிடங்கு அருகே எண்ணெய் டேங்கர் வெடித்தன் காரணமாக இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா



## கோர விபத்தில் சிக்கிய அர்னோல்ட்

பிரபல ஹொலிவூட் நடிகரும் கலிபோர்னியா மாகாணத்தின் முன்னாள் ஆளுநருமான அர்னோல்ட் ஸ்வார்ஸ்னேக்கர் கடந்த 21 ஆம் திகதி கோர விபத்தொன்றில் சிக்கியுள்ளார்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகர் அருகே அவர் பயணித்த கார், அருகில் பயணித்த காரின் மீது மோதியதாலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்விபத்தின் காரணமாக, வேறு இரு கார்கள் மோதிக் கொண்டதாகவும், அதில் பெண்ணொருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ்விபத்தில் அர்னோல்டுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## ஆடைகளை அடுக்கினால் 1.36 இலட்சம் சம்பளம்



மாணவர் ஒருவர் ஆடைகளை அடுக்குவதன் மூலம், இலங்கை மதிப்பில் 1.36 இலட்சம் ரூபாயை மாத வருமானமாகப் பெற்றுவரும் சம்பவம் பிரித்தானியாவில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த மக் மஹோான் என்ற 19 வயதான மாணவரே இவ்வாறு வேலைப் பளுவால் கஷ்டப்படுபவர்களது வீட்டிற்குச் சென்று அவர்களது அலுமாரியில் உள்ள துணிகளை நேர்த்தியாக மடித்துக் கொடுப்பதன் மூலம் மாதந்தோறும் 1.36 இலட்சத்திற்கும் அதிகமான வருமானத்தைப் பெற்று வருகின்றார்.

மேலும் இவரது சேவை தேவைப்படுபவர்கள் தொலைபேசி மூலமாக அவரை எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து

## திடீரென இரத்து செய்யப்பட்ட பிரதமரின் திருமணம்



நியூசிலாந்தின் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தனது திருமணத்தை திடீரென இரத்து செய்துள்ளமை அந்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்னுக்கும் அவரது நீண்ட கால நண்பரான கிளார்க் கேஃபோர்ட்டுக்கும் 2 ஆண்டுகளுக்கு முன்னர் நிச்சயதார்த்தம் செய்யப்பட்டது. இதனையடுத்து, 2022 பெப்ரவரி மாதம் இருவரும் திருமணம் செய்ய இருப்பதாக ஜெசிந்தா அறிவித்தார். அதற்கான ஏற்பாடுகளும் தற்போது செய்யப்பட்டு வந்தன. அந்நாட்டு மக்களும் தங்கள் பிரதமரின் திருமணத்திற்காக காத்திருந்தனர்.

இந்நிலையில், ஒமெக்ரான் வைரஸ் நியூசிலாந்தில் பரவ தொடங்கியுள்ளது. இதையடுத்து தன் திருமணத்தை நிறுத்தப்போவதாக ஜெசிந்தா ஆர்டர்ன் அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

“என் திருமணம் இப்போதைக்கு நடைபெறபோவதில்லை. இது தான் வாழ்க்கை. நாம் எதிர்பார்ப்பது எப்போதும் நடைபெறும் என்று சொல்ல முடியாது. எனக்கும் கொரோனாவால் வாடும் நியூசிலாந்து பொது மக்களுக்கும் வித்தியாசம் இல்லை. நாடு மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும். அதன்பின் திருமணம் பற்றி யோசிப்பேன்” எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

## முகக் கவசத்தால் தரையிறக்கப்பட்ட விமானம்




முகக் கவசம் அணியாத பயணியால் விமானமொன்று தரையிறக்கப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் மியாமி நகரில் இருந்து லண்டன் நோக்கி நேற்று முன்தினம் (22) பயணித்த அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விமானத்தில் பயணித்த பயணியொருவர், முகக்கவசம் அணிய மறுத்துள்ளதாகவும், கொரோனா அச்சுறுத்தல் இருப்பதால் பயணிகள் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும் என விமானப் பணியாளர்கள் அப்பயணியிடம்எவ்வளவோ

> “ முகக்கவசம் அணிய மறுத்ததை அடுத்து, விமானி விமானத்தை தரை இறக்கியதையடுத்து குறித்த பயணியை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்

எடுத்துக் கூறியும், அப் பயணி கேட்கவில்லை எனவும், இதனையடுத்து விமானி உடனடியாக விமானத்தை மியாமி விமான நிலையத்தில் தரையிறக்கியதாகவும், அங்கு முகக்கவசம் அணிய மறுத்த பயணியை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றதாகவும், அவரது பயண அனுமதியை இரத்து செய்ததாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

ஸ்கொட்லாந்து

## கர்ப்பிணித் தாய்மார்களே உஷார்

‘கொரோனாத் தொற்று ஏற்படும் கர்ப்பிணிகள்’ என்னும் தலைப்பில், அண்மையில் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த ஆய்வில் நாட்டில் சுமார் 4,950 கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் இதில், 77%



கர்ப்பிணி பெண்கள் தடுப்பூசி எடுத்துக்கொள்ளவில்லை எனவும், கொரோனாப் பாதிப்பு ஏற்பட்ட கர்ப்பிணி பெண்களின் பிரசவத்தில் குழந்தைகள் இறப்பு விகிதமானது, 1000: 23 என்ற அளவில் உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல கொரோனா தொற்று ஏற்பட்ட கர்ப்பிணிப் பெண்களில் 17% பேருக்கு பிரசவ காலத்திற்கு முன்பாகவே குழந்தை பிறந்திருக்கிறது. இவ்வாறான பாதிப்பு ஏற்பட்ட பெண்கள் அனைவருமே தடுப்பூசி எடுத்துக் கொள்ளாதவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முதலாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# இங்கிலாந்தை சுருட்டிய மேற்கிந்தியத் தீவுகள்



இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், பார்படோஸில் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மே. தீவுகளின் அணித்தலைவர் கெரான் பொலார்ட், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், கிறிஸ் ஜோர்டான் 28 (23), அடில் ரஷீட் 22 (18), ஒய்ன் மோர்கன் 17 (29), ஜேம்ஸ் வின்ஸ் 14 (12) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஜேஸன் ஹோல்டர் 3.4-1-7-4, ஷெல்டன் கோட்ரல் 4-1-30-2, அகீல் ஹொஸைன் 4-0-16-1, பேபியன் அலென் 2-0-10-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 104 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மே. தீவுகள், பிரண்டன் கிங்கின் ஆட்டமிழக்காத 52 (49), நிக்கலஸ் பூரானின் 27 (29), ஷே ஹோப்பின் 20 (25) ஓட்டங்களோடு 17.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், லியாம் டோஸன் 4-0-12-0, அடில் ரஷீட் 4-0-21-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஜேஸன் ஹோல்டர் தெரிவானார்.



## புத்தளம் பிரதேச செயலக மரதனோட்டம்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் நகர சபையின் ஒத்துழைப்புடன் புத்தளம் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட 18 வயதுக்கு மேற்பட்டோருக்கான மரதனோட்டப் போட்டியை புத்தளம் நகர சபைத் தலைவர் எம். எஸ்.எம். ரபீக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

பிரதேச செயலாளருடன் இணைந்து நிகழ்வில் கலந்து கொண்ட ரபீக் தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வுகளை ஆரம்பித்ததுடன், மரதனோட்டப் போட்டியையும் கொடியசைத்து உற்சாகத்துடன் ஆரம்பித்து வைத்தார்.

போட்டி நிறைவில் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி வீரர் எப்.எம். சாஜித் முதலாமிடத்தை சுவீகரித்துக் கொண்டார்.

மேலும் ஸாஹிரா கல்லூரி வீரர்கள் முதல் 10 இடங்களில் முதலாமிடம் உட்பட ஐந்து இடங்களை சுவீகரித்துக் கொண்டுள்ளனர்.

டீ.ஈ.எம். அனஸ், ஏ.பீ.எம். இல்ஹாஸ், எம்.ஆர். அப்கர், ஏ. நபீல், எம்.எஸ்.எம். ஜாமி ஆகியோரே ஏனைய இடங்களை பெற்றுக்கொண்டவர்கள் ஆவர்.



## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த வன்னியின் பெருஞ்சமர்

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்குமிடையிலான 10ஆவது வன்னியின் பெருஞ்சமரானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மகா வித்தியாலயம், முதலில் களத்தடுப்பிலீடுபடத் தீர்மானித்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ம. தேனுஜன் 70, சானுஜன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அபிசாந், பிரவிந்தன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மகா வித்தியாலயம், 9 விக்கெட்டுகளை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில், கதிர்ச்செல்வன் 56, சாத்வீகன் 39, மயூரன் 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், நிருக்சன் 4, விதுசன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி, ஒரு விக்கெட்டை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போட்டி முடிவுக்கு வந்தது.

இப்போட்டியின் சிறந்த சகலதுறைவீரராக மகா வித்தியாலய அணித்தலைவர் ஜோ பிரவிந்தனும், நாயகனாக மகா வித்தியாலயத்தின் எம். தேனுஜனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக மத்திய கல்லூரியின் கதிர்ச்செல்வனும், சிறந்த பந்துவீச்சாளராக மத்திய கல்லூரியின் விதுசனும், சிறந்த களத்தடுப்பாளராக மத்திய கல்லூரியின் பற்றிக்கும் தெரிவாகினர்.

# சம்பியனான நிந்தவூர் காஷிபி உலமா

■ அஸ்ஹர் இப்றாஹீம்

கிழக்கு மாகாண உலமாக்கள் மற்றும் ஹாபிழ்களுக்கான விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் நிந்தவூர் காஷிபி விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

பொலன்னறுவை வெலிகந்த பிரதேசத்தில் நியல் ஸ்டார் உலமாக்கள் அணியால் ஏற்பாடு செய்யப்பட்ட இத்தொடரில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒன்பது அணிகள் பங்குபற்றின.

இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று ஹபீபியா விளையாட்டுக் கழகத்தை வென்றே காஷிபி சம்பியனாகியிருந்தது.

இப்போட்டியின் நாயகனாக அல்ஹாபிழ் ரிப்தாஸும், தொடரின் நாயகனாக மௌலவி அஸாம் காஷிபியும் தெரிவுசெய்யப்பட்டனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 24 ஜனவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.